பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 287 ஆவணி 26 ஆம் நாள் வியாழக்கிழமை 12 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# சவேந்திரவின் நியமனம் உள்நாட்டு விவகாரமே!

### தேவையற்ற தலையீடுகளை ஏற்கோம் என ஐ.நாவில் இலங்கை அழுத்தம் திருத்தம்

ஜெனிவா, செப்ரெம்பர் 12

இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வாவை நியமிப்பது இலங்கையின் உள்நாட்டு விவகாரம். இதில் வெளிச் சக்திகளின் தலையீடு தேவையற்றது. இவ்வாறு ஐ.நா மனித உரிமைகள் சபையில் அழுத்தம் திருத்தமாக அறிவித்தது இலங்கை.

25





## பல லட்சம் பெறுமதியான வாகனங்கள் தீக்கிரை!

பருத்தித்துறை, செப். 12

பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் நேற்றுமாலை தீக்கிரையாகின.

அதிசொகுசு

25

## கோத்தபாய ராஜபக்ச அரசியல் தலைவரல்ல

### லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அரசியல் தலைவர் கிடையாது என ஜே.வி.பியின் அரசியல் பீட உறுப்பினர் கே.டி.லால்

25

காங்கேசன்துறை தேர்தல் தொகுதி

## நடப்பு வருடத்தில் மீளாய்வு இல்லை

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் காங்கேசன்துறை தேர்தல் தொகுதி தொடர்பில் ஏற்கனவே உள்ள அரச தீர்மானத்தை மேலும் ஓர்

25

## சொல்ல வேண்டியதை சஜித்திடம் தெளிவாக எடுத்துரைத்துவிட்டேன்

### வேட்பாளரை ஐ.தே.கவின் மத்திய குழுவே தேர்ந்தெடுக்கும் என்று ரணில் திட்டவட்டம்

கொழும்பு, செப். 12

'ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் எனது நிலைப்பாட்டை கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் நேரில் எடுத்துரைத்துவிட்டேன். வேட்பாளரை கட்சியின் மத்திய செயற்குழுவே தேர்ந்தெடுக்கும்' இவ்வாறு தலைமை அமைச்ச

25

## பாலிதவுக்கு பேராதரவு!

கொழும்பு, செப். 12

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெரும எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரை விடுவிக்குமாறு பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

தோட்டத் தொழிலாளரொருவரின் சடலத்தை புதைக்க தோட்ட உரிமையாளர் இடம்கொடுக்க மறுத்திருந்தார்.

அவர் நீதிமன்

25

## சஜித்தின் தாயார் ரணிலுடன் பேச்சு

கொழும்பு, செப். 12

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தாயார் ஹேமா பிரேமதாச, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுடன்

25



## கஞ்சாவை கடத்தினரென 3 இந்தியர்களுக்கு சிறை!

யாழ்ப்பாணம், செப். 12

இந்தியாவிலிருந்து இலங்கையின் வடக்கு கடற்பரப்பு ஊடாக கஞ்சா போதைப்பொருளைக் கடத்திய இந்தியர்கள் மூவருக்கு தண்டனை விதித்து, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

25

மைத்திரியின் முழு ஆசீர்வாதத்துடன்

## மங்களவுடன் பேச்சு நடத்திவிட்டு ரணிலை சந்திக்க வந்தார் சஜித்!

### தன்னை வேட்பாளராக்குமாறும் கோரிக்கை

கொழும்பு, செப். 12

என்னை ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக்குங்கள். அதன் பின்னர் நீங்களே தலைமை அமைச்சராகவும் கட்சியின் தலைவராகவும் தொடருங்கள் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் நேற்றுமுன்தினம்

25



முகமாலையில்

## கண்ணிவெடி அகற்றும் பகுதியில் எலும்புகள் நேற்று மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 12

முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறும் பகுதியில் நேற்று மாலை எலும்புகள் மீட்கப்பட்டன. அவை எத்தகைய எலும்புகள் என்று நேற்றுவரை உத்தியோகபூர்வத் தகவல் எதுவும் வெளிவரவில்லை.

சம்பவம் தொடர்பில் பளை

25

## சின்னத்தை மறுப்பதேன்?

### சுதந்திரக் கட்சியை கேட்கின்றார் சுசில்

கொழும்பு, செப். 12

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கொள்கையையும், அரச தலைவர் வேட்பாளரையும் ஏற்றுக்கொள்ளும் சிறிலங்கா சுதந்திர கட்சியினருக்கு ஏன் மொட்டுச் சின்னத்தை ஏற்க முடியாது? இவ்வாறு பொதுமக்கள் முன்னணியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த கேள்வி எழுப்பியுள்ளார்.

25

## டி.ஏ.ராஜபக்ச அருங்காட்சியகத்தை அமைப்பதற்கு அரசபணம் மோசடி

### கோத்தாவினது மேன்முறையீடு நீதிமன்றால் நேற்றுத் தள்ளுபடி

கொழும்பு, செப். 12

ஹம்பாந்தோட்டை மெதமுலன பிரதேசத்தில் டி.ஏ.ராஜபக்ச நினைவு அருங்காட்சியகத்தை அமைப்பதற்காக 33.9 மில்லியன் ரூபா அரச பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக

25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத ராசிபலன்

## கன்னி




2019

உங்க ராசி நாதன் புதன் விரைய ஸ்தானத்தில் இருந்து 11 ஆம் திகதிக்கு மேல் உங்க ராசியில் ஆட்சி உச்சமடைகிறார். மாத முற்பகுதியில் விரைய ஸ்தானத்தில் கிரகங்கள் இருப்பதால் செலவுகள் அதிகம் இருக்கும். சுப செலவுகளாக மாற்றுங்கள். சகோதர சகோதரிகளுக்கு அதிக செலவுகளைச் செய்வீர்கள். அம்மாவுக்கு இருந்து வந்த பாதிப்புகள் விலகும். சனி வக்ர நிவர்த்தி அமைந்து சுப பார்வை பார்க்கிறார். கடன் பிரச்சினைகள் தொல்லைகள் தீரப் போகிறது.

தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள். சுக்கிரன் ராசியில் நீச பங்கம் பெற்று அமர்ந்திருப்பதால் முகத்தில் பொலிவு கூடும். இந்த மாதத்தில் இருந்து கஷ்டங்கள் நீங்கும். விடிவு காலம் பிறக்கப் போகிறது. பிரச்சினைகள் குறையும். கணவன் மனைவிக்குள் இணக்கமான நிலை ஏற்படும். திருமண பேச்சு சுபமாக முடியும். ராசிக்குள் சுக்கிரனும் செவ்வாயும் இணைவதால் காதல் திருமணம் செய்வதற்கு ஏற்ற மாதம் காதல் வசப்படுவீர்கள். மனதில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படும். தொழிலில் இலாபம் அதிகம் கிடைத்தாலும் விரைய ஸ்தானாதிபதி 17ஆம் திகதிவரை விரைய



### பாதிப்புக்களும் தடைகளும் நீங்கும் மாதம்

ஸ்தானத்தில் இருப்பதால் செலவுகள் வரும். சொந்த பந்தங்கள் உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும். ஆனால் வயதானவர்கள் கவனமாக இருக்கவும். பூர்வீக சொத்துக்கள் உங்கள் கைக்குவரும். தடைகள் விலகி முயற்சியும் முன்னேற்றமும் கிடைக்கும். வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

பாதிப்புகளும் தடைகளும் நீங்கும். இந்த மாதத்தில் மன உளைச்சல் நீங்கும். இந்த மாதம் தன்னம்பிக்கையோடு செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், வெளிநாடு செல்வது விசயமாக முடிவுசெய்வீர்கள். நல்ல நேரம் நெருங்கிவிட்டது. இந்த மாதம் நினைத்ததை சாதிப்பீர்கள். மாத பிற்பகுதியில் நன்மைகள் நடைபெறும்.

## 12 ராசிக்காரர்களும் விநாயகரை வழிபடும் முறை

ஜோதிட சாஸ்திரத்தில் ராகு,கேது ஆகிய கிரகங்கள்தான் மனித வாழ்வைத் தீர்மானிக்கும் சக்திகளாகத் திகழ்கின்றன. இவற்றால் பாதிக்கப்படுபவர்கள் முதலில் வணங்க வேண்டிய தெய்வம் விநாயகர்தான். 12 ராசிக்காரர்களும் விநாயகரை எப்படி வணங்க வேண்டும் என்பது பற்றிப் பார்ப்போம்.

**துலாம்**

துலாம் ராசிக்காரர்களுக்கு மூன்றாமிடத்தில் நடக்கும் கிரகப் பெயர்ச்சிகள் உடல் உபாதைகளைத் தரலாம். உடல் நலனில் கவனமாக இருப்பது நல்லது. இவர்கள் பஞ்சமுக விநாயகரை வீட்டில் வைத்து வணங்கி திங்கட்கிழமைதோறும் பூஜை செய்து வந்தால் நீடித்த வாழ்வும் ஆரோக்கியமும் பெறுவதுடன் சகல ஐஸ்வர்யங்களும் இவர்களை வந்து அடையும்.

**விருச்சிகம்**

விருச்சிக ராசிக்காரர்களுக்குத் தனம், குடும்பம், வாக்குஸ்தானம் என்று சொல்லக்கூடிய இரண்டாமிடத்தில் நடக்கும் கிரக மாறுதல்களும் ராகு கேது பெயர்ச்சியும் உங்களின் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களைக் கொண்டுவர இருக்கின்றன. குறிப்பாக, மாணவர்களுக்குக் கல்வியில் யோக



நிலையும் ஒருசிலருக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலையும் ஏற்படும். வியாபார அபிவிருத்தி காரணமாகத் தொழில் முன்னேற்றங்கள் பலருக்கும் ஏற்படும். இவர்கள் தினமும் விநாயகரை வணங்க வேண்டும். சட்டைப்பையில் எப்போதும் விநாயகர் படம் ஒன்றை வைத்துக்கொண்டு மனதாலும் பூஜித்து வந்தால், ஆச்சரியமான பலன்கள் இவர்களுக்குக் கிடைக்கும்.

**தனுசு**

ராசிக்காரர்களுக்கு இவ்வளவு நாள்களாக இருந்து வந்த துன்பங்கள் துயரங்கள் இனி படிப்படியாகக் குறைந்து, பெரிய பெரிய முன்னேற்றங்கள் உங்களுக்கு அமையும். ஏழரைச் சனியின் பிடியில் தொடர்ந்து நீங்கள் இருப்பதால் விநாயகரை இடைவிடாது வழிபட்டு அவரைச் சரண் புகுந்திடுங்கள். இனியாவும் உங்களுக்கு நலமாக அமைந்திடும்.

(தொடரும்)



## இன்றைய நாள்

**மேடம்:** சிலர் உங்களிடம் உதவி பெற விரும்புவர். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு உண்டு. பணியாளர்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

**இடபம்:** சிலர் பரிகாசம் செய்து பேசுவர். நம்பிக்கையுடன் செயற்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற மாற்றுத் திட்டம் உதவும். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர் மனப்பாங்கு உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு வரும். பணச்செலவில் சிக்கனம், சிரமம் தவிர்க்க உதவும்.

**கடகம்:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். முயற்சிகளுக்கான நற்பலன் திருப்திகரமாக கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**சிம்மம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** எதிர்வருகிற சூழ்நிலை சங்கடம் உருவாக்கலாம். மனச்சாட்சிப்படி நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் குளறுபடியை தாமதமின்றி சரி செய்யுங்கள். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும்.

**துலாம்:** உங்களின் துன்பம் பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தெய்வ அனுகூலத்தால் நன்மை கிடைக்கும். கூடுதல் பணிகளால் தொழில், வியாபாரம் சீராகும். பணவரவை சிக்கனமாக செலவு செய்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் இரக்க குணம் அதி கரிக்கும். பிறருக்கு உதவுவதில் முதன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து புதிய பரிமாணம் உருவாகும்.

**தனுசு:** உங்களின் பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். அதிக நிபந்தனையுடன் பணக்கடன் பெற வேண்டாம். ஜந்துக்களிடம் விலகவும்.

**மகரம்:** உங்கள் செயல்களில் நேர்த்தி பரிமளிக்கும். குடும்ப உறுப்பினர் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் முன்னேற்ற பலன் உண்டு.

**கும்பம்:** வெளி வட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ரிப்பர் ஓட்டுனர் தேவை

பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு தகுதிவாய்ந்த ரிப்பர் ஓட்டுனர் தேவை. திறமையான ஓட்டுனருக்கு தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். தகுதியும், திறமையும் வாய்ந்த நபர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 952 7107**

## பணியாளர் தேவை

ஆண், பெண் பணியாளர்கள் தேவை. கணக்கியல் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ் மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் நன்று.

**தொடர்பு:- 077 773 0567**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021493 1111

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

ஹேலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 23 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹேலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு : எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர். மேலும் பெண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 19ஆம் திகதி புரட்டாதி மாதம் 2019 வியாழக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**ஹேலோ ட்றஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரையறுக்கப்பட்டவிமானநிலையமற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

## வீடுகள்/கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பலாலி விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்கும்பொருட்டு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரியவீடுகள் / கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

**01.** பலாலி விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் பலாலி விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பலாலி / காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாண போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**02.** வரவேற்பறை / உணவறை / படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் விரும்பப்படுகின்றன) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை.

**03.** அனைத்து விதமான வீட்டுத் தளபாடங்களுடன் இருத்தல் வேண்டும்.

**04.** போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்.

**05.** தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்.

வீடுகள் / கட்டிடங்கள் முதலாவதாக ஒரு வருட காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்து மூலமான உடன்படிக்கை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான உடன்படிக்கை மூலம் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

**கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.**

01. வீடுகள் / கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட / குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2) | வீட்டு / கட்டிடத்தின் முகவரி | 10) | குளியலறைகள் / கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான / இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு / இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5) | கிராமசேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6) | பலாலி விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | தற்போதைய அனைத்துவித வீட்டுத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் முழு விபரம் (உண்டு / இல்லை) |
| 8) | வீட்டின் உள் பரப்பளவு (சதுரடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

**02.** வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.

**03.** வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.

**04.** வீட்டின் / கட்டிடத்தின் புகைப்படங்கள்.

**05.** எதிர்பார்க்கப்படும் மாத வாடகை. (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது.)


**06.** எதிர்பார்க்கப்படும் முற்பணம். (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது)

**07.** முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"வாடகை அடிப்படையில் வீடுகள் / கட்டிடங்களை பெறுவதற்கான முன்மொழிவுகள்"** என குறிப்பிட்டு, தவிசாளர், பெறுகை குழு இலக்கம் 02, வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி, கட்டுநாயக்கவிற்கு 2019.09.24 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தவல்களைப் பெறுவதற்காக 011-2263550/011-2263554 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்.

தவிசாளர்,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.

## மரண அறிவித்தல்



### கந்தப்பு ஞானோதயன் (Boby)

**(ஓய்வுபெற்ற கல்வி வெளியீட்டு திணைக்கள மொழிபெயர்ப்பாளர்)**

கொழும்பை பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு ஞானோதயன் 10.09.2019 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிரட் கந்தப்பு-அனாசின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜதேவியின் அன்பு கணவரும், ஞா.பேனோ இராஜோதயனின் (ஆசிரியர், சென் ஜோன்ஸ் கல்லூரி) தந்தையும், கிறிஸ்ரினா டிலோஜினியின் மாமனாரும், அஸ்ரியல் டினோஷனின் பேரனும், பராநிதி, Dr.பரமமோதயன் (U.K), தயாநிதி (U.K), காலஞ்சென்ற கிருபாநிதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனையானது இன்று (12.09.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு உடுவிலில் உள்ள அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கமானது தெல்லிப்பளையில் உள்ள குடும்ப சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
G.Beno Rajothayan (மகன்)

தேவாலய வீதி, உடுவில்.

**Mob: 077 551 8002**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 21.05.1924



விண்ணில் 13.08.2019

### அமரர் நல்லதம்பி பொன்னுத்துரை

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவியவர்களுக்கும் துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (12.09.2019) வியாழக்கிழமை 10மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி C11235(16/17) குடும்பத்தினர்.

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியும், சத்திரசிகிச்சைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், சத்திரசிகிச்சை நிபுணரும் ஆகிய வைத்திய கலாநிதி **சுப்பிரமணியம் ரவிராஜ்** அவர்களின் அன்பு மனைவி

### திருமதி அனுசுயா ரவிராஜ்

அவர்கள்



இறைபதம் அடைந்த செய்தி அறிந்து எமது ஆழ்ந்த இதய அஞ்சலியை நாமும் பகிர்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!


**மருத்துவபீட அனைத்து ஊழியர்கள்,**
**மருத்துவபீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இளையதம்பி அருமைநாதன்

(அருமை)

திதி :
வளர்பிறை சதுர்த்தசி
(12.09.2019)



அன்னை மடியில் 06.10.1954
ஆண்டவன் அடியில் 29.08.2012

ஆண்டுகள் ஏழு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ எம்துயரம் என்றும் அப்பாவே!
மாண்டு விடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நிலைத்து வாழும் அப்பா!

**உங்கள் ஆத்ம சாந்திக்கு**
**என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.**

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**தேவாலய வீதி,** **குடும்பத்தினர்.**
**நுணாவில் மேற்கு,**
(cs.27968) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

**கறுப்பையா ஜெயக்கொடி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **கறுப்பையா ஜெயந்தி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஜெயந்தி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(sln 2811) (13.17)

## விற்பனைக்கு

Canon EOS 5D mark3, Canon EF24-105mm F/4L ISII USM AUTOFOCUS, Battery Co2) ஐரோப்பாவில் இருந்து கொண்டுவரப்பட்ட Video இற்கு மட்டும் பாவிக்கப்பட்ட Camera விற்பனைக்குண்டு

**077 899 9727**

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**செல்வி சாந்தினி சின்னத்துரை** அவர்களின் சகோதரி

### செல்வி தவமணி சின்னத்துரை

அவர்கள் 02.09.2019 இறைபதமடைந்தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.**

(cs 27986) (13.17)

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் **திருமதி கேதுஷா கமலகுமார்** அவர்களின் தந்தையார்

### ஆறுமுகம் இராமச்சந்திரன்

அவர்கள் 06.09.2019 இறைபதமடைந்தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

## இனிய நினைவுகளுடன் 7ஆம் ஆண்டு



### திருமதி யோகமலர் (மம்மி) இரத்தினசிங்கம்

மண்ணில் :- 31.10.1947
விண்ணில் 30.08.2012

திதி:- 12.09.2019 சதுர்த்தசி

**மம்மியின் நினைவுகள் மனதைவிட்டு அகலாது....**

பாலூட்டி சீராட்டி பக்குவமாய் அமுதூட்டி
பாசக்கரத்தாலே ஆரத்தழுவி நின்று
பார்போற்ற ஆளாக்கிய அன்னையே
நீர்வைத் திருமண்ணில் வேர் கொண்ட அம்மையே
நீண்ட பெருவானின் முழுமதியே
நீயில்லா இருப்பிடம் வெறிச்சோடிக் கிடக்குதம்மா
அன்னையாய் அம்மையாய் யோகம் கொண்ட மலராய்
அனைவர் உள்ளத்திலும் அன்பான மம்மியாய்
அணையாது ஒளிதந்த பெண்ணெங்கே
உயிரணைந்து உறங்கிவிட்ட உத்தமியே
உனையிழந்து சப்த காலங்கள் கடந்தாலும்
உயிர்தந்த உன்னை என்றுமே நாம் மறவோம்



உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
**உங்கள் நினைவுகளுடன்**
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையின் நிமித்தம் இன்று (12.09.2019) வியாழக்கிழமை Cross Rd, Neervely North, Neervely, Jaffna என்னும் முகவரியில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- குடும்பத்தினர் -

இரத்தினசிங்கம்
(கணவர் - இலங்கை) - +9477 754 8710
சதீஸ்குமார் (மகன் - இலங்கை) - +9477 2545 370
நீர்வேலி வடக்கு.

## Tribute to Mrs. Anushiya Raviraj



CS27995(16/17)

The ALUMNI, Faculty of Medicine, Jaffna is deeply Sadden by the demise of **Mrs. Anushiya Raviraj** who is beloved wife of our Dean, and the former President ALUMNI, Faculty of Medicine, Jaffna.

We grieve with our entire ALUMNI family over the passing away of a kind hearted lady.

We Extend our deepest sympathies to the bereaved Dean and his family members.

The ALUMNI, Faculty of Medicine, Jaffna

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 07 . 1933
மறைவு 11 . 09 . 2019

### சின்னராசா அழகம்மா

அல்வாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது கைதடி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா அழகம்மா நேற்று (11.09.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பறுபதத்தின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாராயணப்பிள்ளை சின்னப்பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னராசாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான அன்னம்மா, தங்கம்மா, நவரட்ணம், மலர், ஆனந்தன் ஆகி யோரின் அன்புச்சகோதரியும் தவராசா (கனடா), தவரஞ்சினி (கனடா), ஜெயராசா (கனடா), ஜெயராணி, இரேஜந்திரம், இராஜேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற இராசரட்ணம் ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற கமலமலர் மற்றும் குணரட்ணம், விஜயமாலினி, குணபாலசிங்கம், சறோஜாதேவி, பால கிருஷ்ணன், ஆகியோரின் மாமியும், யுகதீசன், கிறோஜன், மிருதுலா, ஜிவிதா, துஷாயினி, தாட்சாயினி, யனுசிகா, அனுசன், ஜீவிகா, அர்ச்சனா, டிலக்சன், கீர்த்தனா, திலக்ஷன், துளசிகா, சரணிகா, பவணிதரன், அபிஷேக், அப்சறா மற்றும் பிரசாந், பெமிராஜ், மயூரன், சிவா, குகந்தன், சிவரங்கன், கீர்த்திகா, பிறிந்தா ஆகியோரின் பேர்த்தியும் ஜெனிலியா, டேடன், நிலா, நிஷா, பாமிகா, சஞ்செய், அனுஷ்கா, அஜெய் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2019) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் (கைதடி வடக்கு) நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக தச்சம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு, கைதடி

தகவல்: குடும்பத்தினர்
021 205 7[illegible] 077 232 1912

## மரண அறிவித்தல்

### திருமதி அனுசுயா ரவிராஜ்



யாழ்.கைதடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அனுசுயா ரவிராஜ் (10.09.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசுவாமி (உப அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி) தெய்வநாயகி (ஆசிரியை, யாழ். இந்துமகளிர்கல்லூரி) தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான Dr.சுப்பிரமணியம் இரத்தினமணி தம்பதிகளின் அன்புமருமகளும், Dr.ரவிராஜ் (பீடாதிபதி, சிரேஷ்டவிரிவுரையாளர், யாழ்மருத்துவபீடம், சத்திரசிகிச்சை நிபுணர், யாழ்போதனா வைத்தியசாலை) அவர்களின் ஆருயிர் மனைவியும், Dr.குகப்பிரியன் (அவுஸ்திரேலியா), Dr.பிரதாகினி (களுபோவில போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌரி (உப பணிப்பாளர், அரசபகுப்பாய்வு திணைக்களம்), காலஞ்சென்ற யோககுமாரன் (கணக்காளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr.அச்சுதனின் (சத்திரசிகிச்சை பதிவாளர்) அன்பு மாமியாரும், Dr.லலிதா யோகவிநாயகன் (பல்வைத்தியர்), ரமணா (கணினி பொறியியலாளர்) அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின்திருவுடல் இன்று (12.09.2019) வியாழக்கிழமை மு.ப 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக பொரளைஜெயரட்னமலர்சாலையில் வைக்கப்பட்டு, பி.ப 1.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
**குடும்பத்தினர்.**
**0777530526**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா

## விஞ்ஞாபனம் - 13.09.2019

உமையவள்தன் பாலகனார் தேரிலேறி
உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்
பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி
சிக்கலெல்லாம் சீக்கிரமாய் தீரச் செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளுவாய்
கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே


சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலின்
இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில்
**நாளை (13.09.2019) வெள்ளிக்கிழமை** எல்லாம் வல்ல

**கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா**

வெகு சிறப்பாக இடம் பெறவுள்ளது.

நாளை காலை 08.00 மணிக்கு இடம் பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம்பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்சவத்தில் ஈழத்துப் புகழ் பூத்த பல தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்து கொண்டு எம் பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள். கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருட்கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்.**



(CS 27933) (4.17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

தமிழ் இலங்கையர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள்
கலைஞர்களுக்கான அரச விருது - 2019
வழங்கும் வைபவம் **02.09.2019** திங்கட்கிழமை அன்று
**கொழும்பு தாமரைத்தடாகத்தில் இடம்பெற்றது.**
அதில் எமது சாரங்கம் இசைமன்ற முதல்வர்
**திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் "கலைச்சுடர்"** என்ற விருதையும் அவரது
புதல்வன் (மன்ற இசை ஆசிரியர்) **செல்வன் ரஜீந்திரன் சுரசாஹித்தியன்**
**"கலை இளவரசன்"** என்ற விருதையும்
பெற்றதுடன் **ர.சுரசாஹித்தியன்** அவர்கள்
**அரச இசை ஆலோசனைக்குழு - கலாசார அலுவல்கள்**
**திணைக்களத்தால் - அரச இசை விருது வழங்கல் -**
**2018 இற்கான சிறந்த ஆக்கபூர்வமான சாஸ்திரிய பாடல்**
**செய்முறை விருதையும் பெற்றிருந்தார்.**
இவர்களை மனமார வாழ்த்துவதுடன்
**மேன் மேலும் சிறந்த விருதுகளை பெற்று பல்லாண்டு காலம் வாழ**
**வாழ்த்தி நிற்கின்றோம்.**

வாழ்த்துவோர்: **சாரங்கம் இசை மன்ற**
**நிர்வாகமும், மாணவர்களும்.**

(cs:27982) (13.17)

# THE ANNUAL PRIZE GIVING (2019) OF ST.JOHN'S COLLEGE, JAFFNA

**Will be held on**

**Friday 13 th September 2019**
**at 09.30a.m.**
**the Chief guest will be**

**Rt.Rev.Keerthisri Fernando**
*The Bishop of Kurunagala*

**Parents, Old boys & Well - Wishers**
**are cordially invited.**

Acting Principal, Staff & Students

(IN/11228)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியும்,
சத்திரசிகிச்சைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும்,
சத்திரசிகிச்சை நிபுணரும் ஆகிய
வைத்திய **கலாநிதி சுப்பிரமணியம் ரவிராஜ்**
அவர்களின் அன்பு மனைவி

திருமதி **அனுசுயா ரவிராஜ்** அவர்கள்

இறைபதம் அடைந்ததையிட்டு நாமும் துயர்பகிர்கின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

(CS 27981)(10)

**உத்தியோகத்தர்கள்**

**சத்திரசிகிச்சைத்துறை**
**மருத்துவபீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**பல்கலைக்கழக சத்திரசிகிச்சைப் பிரிவு**
**போதனா வைத்திய சாலை,**
**யாழ்ப்பாணம்.**

# துயர் பகிர்கின்றோம்



எமது பீடாதிபதி Dr.S. **ரவிராஜ்**
அவர்களின் அன்பு துணைவியார்

**திருமதி**
**அனுசுயா ரவிராஜ்**
அவர்களின்
மறைவையிட்டு மீளாத்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்திற்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**இணை மருத்துவ விஞ்ஞான அலகு**
**மருத்துவ பீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 55ஆயிரம் ரூபாவில் ஜீப் வண்டி இலங்கை இளைஞனால் கண்டுபிடிப்பு



மாத்தளைகலேவெலாகல்பொக்கையாவா கிராமத்தைச்சேர்ந்த டி.எச்.எம். திரு. சிசிரா குமாரா, என்பவர் (36 வயது) என்பரால் ஜீப் ஒன்றைத் தயாரித்துள்ளார்.

கராஜில்வேலை செய்யும் இவர் அங்கிருக்கும் சில வாகனங்களின் பழைய





பொருள் கள், ரயர் பயன்படுத்தி ஜீப்பைத்தயாரித்ததுடன் அதன் இயந்திரத்திரத்துக்கு மோட்டார் சைக்கிள் இன்ஜினைப் பயன்படுத்தியுள்ளார். இந்தஜீப்70கி.மீற்றர்வேகத்தில்பயணிக்கும் எனவும் 5 பேர் பயணிக்க முடியும். என தெரிவித்துள்ளார். இதற்குகிட்டத்தட்ட55ஆயிரம்ரூபா செலவானது எனவும் குறிப்பிட்டார். ஜீப்பில் கியர், பிரேக்கு கள், விளக்குகள் மற்றும் பாதுகாப்பு பெல்ட்கள் போன்றஒருவாகனத்துக்குதேவையான அனைத்து பொருத்தப்பட்டுள்ளன. சிறு வயதிலேயே உலங்குவானூர்தி ஒன்று உருவாக்கினேன், தற்போது ஒரு சிறிய மோட்டார் சைக்கிள் இஞ்ஜின் மூலம், வாகனத்தை உருவாக்க முடிந்தது. ஜீப்பை இப்போது யார் வேண்டுமானாலும் பரிசோதிக்கலாம் என்றும், அரசனாங உதவியை மேற்கொண்டால் இப்படி வாகனங்களை தயாரிக்க முடியும் எனவும் பதிவு எண் கிடைக்காவி ட்டாலும் தனது பகுதியில்குடும்பத்துடன்பயணம்செய்வதாக அவர் கூறினார்.

## உளவளத்துணைக்கு பணியாள்கள் தேவை

முல்லைத்தீவு. உண்ணாப்புலவில் அமைந்துள்ள "அமைதித் தென்றல்" உள சமூக ஆற்றுப்படுத்தல் மையத்திற்கு முழங்காவில், பூநகரி, கிளிநொச்சி பிரதேசங்களில் பணி செய்யக் கூடிய தகுதிவாய்ந்த / அனுபவமிக்க உளவளத்துணையாளர்கள் தேவை. 2019 புரட்டாதி 18 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0212290053/0771987351

## Jaffna College Alumni Association Annual General Meeting

The Annual General Meeting (AGM) of the Jaffna College Alumni Association (JCAA) will be held on Saturday, 05th of October 2019 at 9 a.m. in Ottley Hall, Jaffna College. All members of the Association are invited.

- Any resolution to be forwarded to the members of the Association should reach the Secretary on or before the 20th of September 2019 at The Secretary, Jaffna College Alumni Association, Jaffna College, Vaddukoddai. Resolutions received after this date will not be tabled for discussion and adoption at the AGM.
- Those who wish to join the Association may submit completed membership forms at the meeting. Membership forms will be available at the entrance.
- Members are requested to join the fellowship lunch. Lunch tickets are available at the Main Office of Jaffna College or can be obtained from the following members:

Mr. S. Mayuran (Treasurer) - 0773114144
Mr. P. Srikuhan - 0770762378
Miss. B. Nishanthini 0770834132

G.Gokilaramanan
Secretary
Jaffna College Alumni Association
Vaddukoddai.

12.09.2019

CS27999(16/17)

உ

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் துன்னாலை வடக்கு, புலோலி வருடாந்த மஹோற்சவம்-2019

### தற்காலிக கடைகள் வழங்குதல்

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 28.09.2019 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எனவே மஹோற்சவ காலத்தில் தற்காலிகக் கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. கடைகள் தொகுதி வாரியாகப் பின்வரும் வகையில் அமையும்.

1. ஐஸ்கிறீம் 2. இனிப்பு வகை
3. தேநீர்க்கடை 4. மணிக்கடை 5. கச்சான் கடலை

**முக்கிய குறிப்பு:-**

- முதல் மூன்று கடைத்தொகுதிகளுக்கான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய ஏலத் தொகைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.
- அக்கறையுடைய வர்த்தகர்கள் முன் கூட்டியே இட ஒதுக்கத்தைப் பெற்று அதற்கான வாடகைப் பணத்தை முழுமையாகச் செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- இட ஒதுக்கீடு தொடர்பான விவரங்கள், விண்ணப்பப் படிவங்களை கோவில் கருமபீடத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 17.09.2019 வரை கரும பீடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.
- பகிரங்க ஏலம் 17.09.2019 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கோவில் வளாகத்தில் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு:-021 226 3074 | 021 205 6644

அறங்காவலர் சபை
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்,
துன்னாலை வடக்கு, புலோலி.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.09.2019 | வெற்றி வாரம் 2614 | வர்ணம் பச்சை
இடபம் வெற்றி இலக்கங்கள் 01 34 49 52
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3.001.598/=
12.09.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 278
சீட்டிழுப்பு திகதி 11.09.2019 நீலம்
ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 21 33 52 | விதி எண் 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 43,800,860/=
13.09.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

Q 37 53 59 76
9 3 1 3 6
சீட்டிழுப்பு வாரம்: 493 | திகதி: 2019 செப். 10
வர்ணம்: இளஞ்சிவப்பு | செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 139,586,343/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 728
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.09.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000/-
வெற்றி இலக்கங்கள் 27 30 65 72 ஆங்கில எழுத்து Q
விசேட வெற்றி இல. 5513
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3234 திகதி: 2019.09.11 புதன்கிழமை
SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 01 26 72 75 C
போனஸ் இலக்கம் 25
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 60,129,985/-
தொ.பே: 011 4062062 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## 24ஆம் ஆண்டு உன் நினைவில்

மண்ணில் மழலையாய் 12 . 06 . 1979

விண்ணில் தெய்வமாய் 12 . 09 . 1995



### செல்வன் சிறிஸ்கந்தராஜா றமேஷ்குமார்

(யாழ். யூனியன் கல்லூரி - ஆண்டு 11 மாணவன்)

ஆண்டுகள் இருபதோடு நான்கு ஆனதுவே.
உன் அழகு முகம் கண்டு "ரமேஷா"!
நீ வாழ்ந்த பாதி வாழ்க்கையிலே
சேனை சனம் சூழ்ந்து இருக்க
குதூகலமாய் வாழ்ந்தாயே!
குலம் சிறக்க வாழ்ந்திடுவாய் என்று எண்ணியதெல்லாம்
எமன் வடிவில் எறிகணை வந்து எடுத்ததுவோ உன் உயிரை
ஆண்டுகள் பல ஆனாலும் ஆறாது எம் மனக்குமுறல்...

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, அக்கா, அத்தான்,
அண்ணா, தங்கை, மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இது புதுசு






பெண்களுக்கான அழகிய கைப்பைகள் அறிமுகமாகியுள்ளன. இவை 999 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# பொன்னியின் செல்வன் டிசெம்பரில் ஆரம்பம்



'செக்க சிவந்த வானம்' படத்தைத் தொடர்ந்து மணிரத்னம் இயக்கத்தில் கல்கியின் சரித்திர நாவலான 'பொன்னியின் செல்வன்' திரைப்படமாக உருவாகி வருகிறது. ஐஸ்வர்யா ராய், ஜெயம் ரவி, கார்த்தி, விக்ரம், அமலாபால், கீர்த்தி சுரேஷ், பார்த்தீபன், ஐஸ்வர்யா லட்சுமி உள்ளிட்ட பலர் இந்தப் படத்தில் நடிக்க உள்ளனர். திரிஷாவையும் நடிக்க வைக்க பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
யார் எல்லாம் நடிக்கிறார்கள் உள்ளிட்ட எந்த ஒரு விவரத்தையும் படக்குழு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. இந்த நிலையில், இந்தப் படத்துக்காக 12 பாடல்களை எழுத உள்ளதாகக் கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார். அந்தக் காலத்தில் உள்ள வார்த்தைகளை இந்தக் காலத்தில் உள்ள மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எழுத உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க உள்ள இந்தப் படத்துக்கு ரவிவர்மன் ஒளிப் பதிவு செய்ய உள்ளார். டிசெம்பர் முதல் வாரத்தில் படப்பிடிப்பை தொடங்க படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர். இதற்கான பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகின்றன. படப்பிடிப்பு தொடங்கப்படும் நாள் அன்று தான் படக்குழு வினரை அதிகாரபூர்வமாக அறிவிக்கப் படக்குழு முடிவு செய்துள்ளது.

## நானே அரச தலைவர் வேட்பாளர்




யானை தன் கையாலேயே தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டது

## ஸ்மார்ட் காலணி தெரியுமா?




ஸ்மார்ட்போன் தெரியும். ஸ்மார்ட் காலணி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 'ஸ்மார்ட் ஷூ' என்ற பெயரில் புதிய ரக காலணி அறிமுகமாகியிருக்கிறது. 'நைக் அடாப்ட்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் காலணியில் புதிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்டுள்ளது. இந்தக் காலணியை அணியும்போது பாத அளவுகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.
எம்முடைய பாத அளவுக்கு ஏற்றால் போல அதுவாகவே பொருந்திக் கொள்ளும். அத்தகைய ஆற்றல் இந்த காலணியில் உள்ளது.
இதேபோல குனிந்து காலணியை மாட்ட வேண்டிய தேவையும் இல்லை. கூடைப்பந்தாட்ட வீரர்களை மனதில் வைத்து இந்த காலணியை 'நைக்' நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த காலணியை அணிந்திருந்தால் அது காலில் இருக்கும் உணர்வே இருக்காதாம்.
இன்னொரு முக்கியமான விடயம், விளையாடும்போது காலணி லேஸை அடிக்கடி இறுக்கிக் கட்ட வேண்டிய அவசியமும் இல்லை. ஏனென்றால், இதில் காலணி லேஸே கிடையாது. இதுபோன்ற பல அம்சங்கள் இருப்பதால்தான் இதை 'ஸ்மார்ட் காலணி' என்கிறார்கள்.








## அந்தஸ்தை விட மனிதநேயம் பெரியது



## வேண்டவே வேண்டாம்!

- உதவா உள்ளம் வேண்டாம்!
- மன்னிக்கா மனம் வேண்டாம்!
- பணிவில்லா பண்பு வேண்டாம்!
- நன்றியில்லா நட்பு வேண்டாம்!
- பொய்யான உள்ளம் வேண்டாம்!
- பகைமையான பாசம் வேண்டாம்!
- வறுமையான வாழ்வு வேண்டாம்!
- அடக்கமில்லா அமைதி வேண்டாம்!
- சமாதானமில்லா சமூகம் வேண்டாம்!
- வேற்றுமையை வளர்க்க வேண்டாம்!
- ஓரினம் என்பதை மறக்க வேண்டாம்!
- மொழிப் பற்றை இழக்க வேண்டாம்!
- தாய்மொழியை மறக்க வேண்டாம்!
- மொழிவெறி மதவெறி வேண்டாம்!
- இனத்துக்குள் பேதம் வேண்டாம்!
- தீயவை வேண்டவே வேண்டாம்!




## மரண அறிவித்தல்
## நாகம்மா யோகர்

(ஆசிரியை- ஏழாலை அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை)



தோற்றம் 22.12.1937 மறைவு 08.09.2019


யாழ். குப்பிளான் வடக்கு வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும். கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா யோகர் 08-09-2019 ஞாயிற்றுக் கிழமை அன்று Toronto வில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார். காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சிமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும். காலஞ்சென்றவர்களான கதிரேசு - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற யோகரின் அன்பு மனைவியும். மீனலோஜினி (கலா- லண்டன்). யோகேந்திரன் (பாபு). உமா. சுகார் (சுரேஸ்- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ஜெயரட்ணசிங்கம் (லண்டன்). பொங். மணிவண்ணன். ரதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். நடராஜா (அவுஸ்திரேலியா). காலஞ்சென்றவர்களான நேசம்மா. இராசம்மா மற்றும் விக்னேஸ்வரராசா. சண்முகலிங்கம் (அவுஸ்திரேலியா). குலசிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும். சைரிகா- கிசோக். Dr. டெபிசிகா- Dr. அர்ச்சுன். அம்புஜன். மைக்கல். கரிஷா. சச்சின். ஜெயஷாந். சிவயோகர்(சுஞ்சைு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2019) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.
தகவல் :சி.இராசகுலேந்திரன் (குலம்)
(CS 27967)04.17)
உமா (மகள் - கனடா) - +141 649 42080


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராம் ஜெத்மலானி சட்டத்துறையில் சகாப்தம்

நாம் வாழும் காலத்தில் சட்டத்தரணி என்றதும் உடனடியாக நினைவுக்கு வருகிற பெயர்களில் ஒருவராக இருந்தார் ராம் ஜெத்மலானி. தற்போதைய பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் தனது 18 வயதில் சட்டத்தரணியானவர். அவரது பாடசாலை நாள்களில் 'டபுள் பிரமோசன்' (இரட்டைப் பதவி உயர்வு) எனப்படும் நடைமுறை இருந்ததால், 13 வகுப்பிலேயே மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றிபெற்று 17 வயதிலேயே சட்டப் படிப்பை முடித்து விட்டார்.



**நீதிபதி பதவி நிராகரிப்பு**

அப்போது சட்டத்தரணியாவதற்கு குறைந்தபட்ச வயது 21. எனவே, சிறப்புத் தீர்மானம் போட்டு அவரை சட்டத்தரணியாகப் பதிவுசெய்துகொள்ள அனுமதித்தார்கள். இளம் வயதிலேயே மும்பாய் மாநகர நீதிமன்றத் தில் நீதிபதியாக அவருக்கு அழைப்பு விடுக்கப் பட்டது. விருப்பம் இருந்தாலும் நலம் விரும்பிகளின் ஆலோசனைப்படி அந்த அழைப்பை மறுத்துவிட்டார்.

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அதற்குக் காரணம் கேட்டபோது ராம் ஜெத்மலானி சொன்ன பதில், நான் அந்த அளவுக்கு மதிக்கத்தக்கவன் அல்ல. சட்டத்தரணி என்ற அடையாளத்தை மட்டுமே விரும்பிய அவர் 75 ஆண்டுகளுக்கும் மேல் அந்தத் துறையில் பணியாற்றியிருக்கிறார்.

இத்தனை நீண்ட கால சட்டத்தரணி அனுபவம் என்பது வேறு எவருக்கும் வாய்க்காத ஒன்று. உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவராகவும் இந்திய சட்டத்தரணிகள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார். பன்னாட்டு சட்டத்தரிணிகள் சங்கத்திலும் அவர் உறுப்பினராகப் பதவி வகித்திருக்கிறார்.

**திறந்திருக்கும் கதவுகள்**

தீபக் மிஸ்ரா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது நடந்த பாராட்டு விழாவில் திடுதிடுப்பென்று தனது பணி ஓய்வை அறிவித்தார் ஜெத்மலானி. நீதிபதி பணிகளுக்கு ஓய்வு உண்டு. சட்டத்தரணிகள் தான் வாழும் காலம் வரை பணியாற்ற முடியும். என்றாலும், ராம் ஜெத்மலானி ஓய்வுபெறுவதாக அறிவித்தபோது 94 வயதில் அடியெடுத்துவைத்திருந்தார். சட்டத்தரணி தொழிலிலிருந்து ஓய்வுபெற்றாலும் தொழில் பழக விரும்பும் சட்டத்தரணிகளுக்குத் தனது அலுவலகக் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும், அவர்களுக்கு வாய்ப்புள்ள எல்லா வகைகளிலும் உதவுவதற்குத் தயாராக இருக்கிறேன் - என்றார்.

இளம் சட்டத்தரணியாகப் பயிற்சி பெற்று பிரபல்யத்தைப் பெறுவது என்பது ஏழு கடல்கள், ஏழு மலைகளைக் கடக்கும் சாகசம். ராம் ஜெத்மலானியும் அந்தத் தடைகளையெல்லாம் தாண்டித்தான் நாடறிந்த சட்டத்தரணியாகப் பெயரெடுத்தார். பணி ஓய்வை அறிவித்த அந்த நேரத்தில், தனது பயிற்சிக்கால அனுபவங் களையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

"அது ஒன்றும் ரோஜா படுக்கையாக இல்லை. சில சமயங்களில் படுக்கை இருக்கும், ரோஜாக்கள் இருக்காது சில நேரங்களில் ரோஜாக்கள் இருக்கும், படுக்கை இருக்காது" பிற்பாடு வழக்குக்கு ஒரு நாளைக்கு ரூ. 25 லட்சம் வரை வாங்குபவராகச் சொல்லப்பட்ட அவர் நடத்திய முதல் வழக்குக்கு ஒரு ரூபா மட்டுமே ஊதியம் பெற்றார் என்றொரு கதை வெகு பிரபலம்.

ராம் ஜெத்மலானி தான் சட்டத்தரணி தொழிலிலிருந்து ஓய்வுபெறப்போவதாக அறிவித்தது இது இரண்டாவது தடவை. 14 ஆண்டுகளுக்கு முன்பு "இனி புதிய வழக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது" என்று தனது அலுவலகத்தில் அறிவிப்புப் பலகை வைத்தார். ஆனால், ஜெசிகா லால் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மனு சர்மாவுக்காகத் தனது முடிவை மாற்றிக்கொண்டார்.

**ஊழல் எதிர்ப்பு முழக்கம்**

சட்டத்தரணி தொழிலிலிருந்து ஓய்வு பெற்றாரேயொழிய, பொதுவாழ்வில் மேலும் தீவிரமாக ஈடுபடப்போவதாகவே அறிவித்தார். ஊழல் எதிர்ப்பு அவரது முழக்கமாக இருந்தது. ஊழலைக் களைய நீதித் துறையும் சட்டத்தரணிகளும் ஒன்றாகக் கைகோர்க்க வேண்டும் என்று அழைப்புவிடுத்தார். நாட்டை ஆண்ட கட்சியும் ஆளுகிற கட்சியும் மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளைக் காப்பாற்றத் தவறிவிட்டதாக, வெளிப்படையாக விமர்சிக்கவும் செய்தார். வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணம் பதுக்கப்படுவதை எதிர்த்து, ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தவர் அவர். ஊழல் எதிர்ப்பை முன்னிறுத்தியே 2014 தேர்தலில் மோடியை அவர் ஆதரித்தார். பிற்பாடு அதன் காரணமாகவே அந்த ஆதரவை விலக்கிக்கொள்ளவும் செய்தார்.

> தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு, சொத்து குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதன் பின்னர் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்காக முன்னிலையானவர் ராம் ஜெத்மலானி. அவர் முன்னிலையான பின்னர் வழக்கின் போக்கே மாறியது. அவர் விடுவிக்கப்பட்டார்.

வழக்கு மன்றங்களிலும் சட்டம் இயற்றும் அவைகளிலும் ஒருசேரப் பிரகாசித்த அரிதான சட்டத்தரணிகளில் ராம் ஜெத்மலானியும் ஒருவர். பா.ஜ.க. தொடங்கப்பட்ட காலத்திலேயே அதன் உறுப்பினராக இருந்தவர். இரண்டு முறை அந்தக் கட்சி சார்பில் மும்பையிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவையில் சட்டம் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பதவிவகித்தார்.

2004ஆம் ஆண்டு வாஜபாயை எதிர்த்து லக்னௌ தொகுதியில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். 2010ஆம் ஆண்டு மீண்டும் பா.ஜ.க.வில் இணைந்தார். மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2016ஆம் ஆண்டு ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் ஆதரவோடு மாநிலங்களவை உறுப்பினராகத் தொடர்ந்தார்.

நீதிபதிகளை நியமிக்கத் தனி ஆணையம் அமைக்கப்பட வேண்டும். அரச பிரதிநிதியாக தலைமை அமைச்சர் அல்லது சட்ட அமைச்சர், எதிர்க்கட்சி பிரதிநிதி மற்றும் சட்டக் கல்வித் துறையில் தகுதிவாய்ந்த அறிஞர் ஒருவரும் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். நீதிபதிகளேகூடி நீதிபதிகளை நியமிக்கிற முறையைக் கடுமையாகக் கண்டிக்கவும் செய்தார். நீதிபதிகள் நியமனத்துக்குத் தனி ஆணையம் வேண்டும். ஆனால், அது தலைமை அமைச்சரும் சட்ட அமைச்சரும் மட்டுமே கொண்டதாக இருந்தால், அந்த ஆணையத்தை எதிர்ப்பவனாகவும் நான் இருப்பேன் - என்றார்.

இங்கிலாந்தில் இருப்பதைப் போன்று மூத்த சட்டத்தரணிகளை நீதிபதி களாகப் பதவியேற்றுக்கொள்ளும்படி அழைப்பு விடுக்கும் வழக்கத்தை இந்தியாவிலும் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார். மூத்த சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் தனது வாதத் திறமையைக் காட்டலாம், ஆனால் அது ஒருபோதும் நீதிபதியாவதற்கான தகுதியாக இல்லை என்பது தானே இன்றைய இந்திய யதார்த்தம்.

**உண்மையை உரக்கச் சொல்பவர்**

பதவி உயர்வு அடிப்படையில் மட்டுமே உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது சரியானது அல்ல என்பது ராம் ஜெத்மலானியின் உறுதியான கருத்து. உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக வழக்கு நடத்திய அனுபவமே இல்லாதவர்கள் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டு வரும் நடைமுறையை எதிர்த்து முழங்க ராம் ஜெத்மலானி போன்ற ஒரு உண்மையை உரக்கச் சொல்லும் ஒருவரால் மட்டுமே முடியும்.

தூக்கு தண்டனைக்கு எதிராகவும் தொடர்ந்து தன்னுடைய கருத்துகளை வலியுறுத்திவந்தார் அவர். பிரசித்த பெற்ற சட்டத்தரணிகள் தோற்க வாய்ப்புள்ள வழக்குகளை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுவார்கள். ராம் ஜெத்மலானி விதிவிலக்கா கவே இருந்தார். கடுமையான குற்றச்சாட் டுகள் சுமத்தப்பட்டவருக்கும் தனது தரப்பில் சொல்வதற்கு நியாயம் இருக்கும், அதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதே இயற்கை நீதி. அந்த நியாயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதே ஒரு மூத்த சட்டத்தரணியின் கடமை. ராம் ஜெத்மலானி தனது கடமையைச் செய்யத் தயங்கியவர் இல்லை. ராம் ஜெத்மலானியின் முக்கால் நூற்றாண்டு சட்டத் துறை அனுபவத்தை ஒற்றை வாக்கியமாக சுருக்கினால், 'சந்தேகத்தின் பலனைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கியே ஆக வேண்டும், அதுவே நீதி'.

*நன்றி - த ஹிந்து*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com




## வார்த்தை ஜாலங்களை விடுத்து செயலாற்றுவதே நன்மை தரும்

இலங்கையில் அரசதலைவர் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தெற்கு முதன்மைக் கட்சிகள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகின்றன.

இந்த நிலமையில் பன்னாடுகளுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றும் வேகம் குறைவாக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகளின் சார்பாக தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 42ஆவது கூட்டத் தொடரில், பிரிட்டன் பிரதிநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை நியமித்திருப்பது நல்லிணக்க முயற்சிகளைக் குறை மதிப்புக்கு உட்படுத்துகின்றது என்றும் அந்த அறிக்கையில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசுகளைப் பொறுத்தவரையில் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும், அதன்பின்னர் அவற்றைக் கிடப்பில் போடுவதும் தொடர்கதையாகவே உள்ளது. தமிழ் மக்களுக்கு இலங்கை அரசின் வாக்குறுதிகள் தொடர்பாக நீண்ட அனுபவம் உள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் அரசியல் தீர்வு அவசியமானது என்பது வெளிப்படையாகத் தெரிந்த உண்மையாகும். பௌதிக அபிவிருத்திகள் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இலங்கை அரசுகளைப் பொறுத்தவரையில் பௌதிக அபிவிருத்தி என்ற திரையிட்டு, தமிழ் மக்களுக்கான தீர்வைப் பின்னகர்த்திச் செல்லும் தந்திரோபாயத்தையே முன்னெடுக்கின்றன. தமிழ் மக்கள் கோரும் அரசியல் தீர்வைக் காலப்போக்கில் மறக்கடிக்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் அவை இயங்குகின்றனவா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் இல்லாமல் இல்லை.

தற்போதைய அரசும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அந்த வாக்குறுதிகளில் எவற்றையேனும் முழுமையாக நிறைவேற்றியுள்ளதா என்ற கேள்வியை எழுப்பினால், இல்லை என்பதே பதிலாக இருக்கின்றது. இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையில் இணை அனுசரணை வழங்கியிருந்த நாடுகளும் அதைத் தற்போது சுட்டிக்காட்டியுள்ளன.


ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இணைத் தீர்மானம் 30/1 இன் மூலம், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்காக சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான உரிமையை இலங்கை எடுத்துக்கொண்டு நான்கு ஆண்டுகளாகின்றன என்று அந்த நாடுகள் சுட்டிக்காட்டு கின்றன.

வடக்குக்கும், கிழக்குக்கும் வரும் தெற்கு அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்வு தொடர்பாகப் பல கருத்துக்களையும், வாக்குறுதிகளையும் அள்ளி வீசி வருகின்றனர். கடந்த காலக் கசப்பான அனுபவங்களால் தமிழ் மக்கள் வாக்குறுதிகளை நம்பும் நிலமையில் இல்லை. அரசியல் தீர்வுக்கான சாத்தியப்பாடுகள் இருந்தபோது, அவற்றை முன்னகர்த்திச் செல்ல முட்டுக்கட்டையாக இருந்த தெற்குத் தலைமைகள் எதிர்காலத்தில் எவ்வாறு அதை முன்னெடுத்துச் செல்லவார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது இயல்பானதே.

தெற்கு அரசியல் தலைமைகள் வாக்குறுதிகள் வழங்குவதை விடுத்து, தமிழ் மக்கள் நம்பும் வகையிலான அடியை முன்னோக்கி வைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே தமிழ் மக்களின் நம்பிக்கையை அவர்களால் பெறமுடியும். அதை விடுத்து பெரும்பான்மையின மக்களிடம் தமது செல்வாக்குச் சரிந்து விடும் என்ற அச்சத்தில் வெறும் வார்த்தை ஜாலங்களால் தமிழ் மக்களை ஏமாற்ற முயன்றார்களாயின் அது அவர்களுக்கு தோல்வியையே தரும். அதுமட்டுமன்றில் நல்லிணக்கம் ஏற்படுவது எட்டாக்கனியாகவே இருக்கும்.

# வெறும் பேச்சுக்களால் தமிழர்களுக்கு எதுவுமே கிடைத்துவிட மாட்டாது

சேரலாதன்



அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நெருங்கி வருவதால் தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தமிழர்களை ஈர்க்கும் பொருட்டு வாயில் வந்ததையெல்லாம் உளறிக்கொட்டிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழர்கள் மீது திடீரெனப் பரிவும், பாசமும் வந்தவர்களைப் போன்று அவர்கள் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது என்ன சொல்வதென்றே புரியவில்லை. இறுதிப் போரில் பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோதிலும், அவர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்ட போதும் வாய் மூடி மௌனிகளாக இருந்த இவர்கள், தேர்தல் என்றவுடன் அவற்றை மறந்து உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் போன்று காட்டிக் கொள்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி தமிழர் விரோத மனப்பான்மையுடன் செயற்பட்டு வந்ததை எவருமே மறந்துவிட முடியாது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக்கப்பட்டதற்கு எதிராகக் குரல்கொடுத்த இந்தக் கட்சியினர் தற்போது தாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கையும் கிழக்கையும் ஒன்றாக இணைக்கப் போவதாகக் கூறுகின்றனர். அதுமட்டுமல்லாது தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையைத் தம்மால் வழங்க முடியுமெனவும்கூறுகின்றனர். ஆனால் எதுவுமே நடந்துவிடப்போவதில்லை. எல்லாமே ஏமாற்றுகின்ற வார்த்தைகள்தான்.

மகிந்த ராஜபக்சகூட புதிய அரசமைப்பைத் தாம் உருவாக்கப் போவதாகக் கூறியுள்ளார். ஆனால், அதன் உள்ளடக்கம் தொடர்பாக எதுவுமே குறிப்பிடவில்லை. சிலவேளை தற்போதுள்ள அரசமைப்பில் தமிழர்களுக்குச் சாதகமான அம்சங்களை அவர் நீக்கவும் கூடும்.

### சிங்கள அரசியல்வாதிகளால் தமிழர்களுக்கு நன்மையில்லை

ஐக்கிய தேசியக் கட்சியைப் பார்த்தால் ரணில் விக்கிரமசிங்க அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவதையும் சஜித் பிரேமதாச வீட்டுத்திட்டங்களை தொடக்கி வைப்பதையும் காண முடிகின்றது. இவை தமிழர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வாகாது.

சிங்கள அரசியல்வாதிகள் தமது இனத்தவர்களைப் பகைத்துக்கொண்டு தமிழர்களுக்கு எதையுமே செய்யமாட்டார்களென்பதை உறுதியாகக்கூற முடியும். ஏனென்றால் இந்த நாட்டின் தலைவிதி அதுவாகவே உள்ளது.

இதேவேளை-வரதராஜப்பெருமாள், முத்தையா முரளிதரன் போன்றவர்கள் தமது எசமான விசுவாசத்தை வெளிக்காட்டிக் கொள்வதை ஏற்க முடியவில்லை.

பெருமாள் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பதவியை இந்தியாவின் ஆதரவுடன் வகித்த ஒருவராவார். இவர் தம்மையொரு இடது சாரிக்கொள்கையாளராகவும் அடையாளப்படுத்துவதற்குத் தவறுவதில்லை. இவர் மீது விடுதலைப் புலிகள் கடும் கோபம் கொண்டிருந்தனர். இதனால் இந்தியாவில் தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்தார். தற்போது நாட்டுக்குத் திரும்பியுள்ள இவர் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எதுவுமே அறியாதவர் போன்று கண்டவாறு பேசி வருகின்றார். அரச தலைவர் தேர்தலில் கோத்தபாயவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் கேட்டு வருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இவர் வெளியிட்ட கருத்துக்களால் சீற்றமடைந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இவரை மோசமாக அவமானப்படுத்தும் விதமாக நடந்துகொண்டதைக் காண முடிந்தது. இவர் தமது செயற்பாடுகளில் மாற்றத்தைக் கொண்டுவருவது அவசியமானதாகும். ஒரு தமிழர் என்ற வகையில் அவர் அதைச் செய்தேயாக வேண்டும். சிங்கள அரசியல்வாதிகள் போன்று இவரும் நடந்து கொள்வதைத் தமிழர்கள் இனியும் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள்.

அதேவேளை முன்னாள் கிரிக்கெட் வீரரான முத்தையா முரளிதரன் வெளியிட்ட கருத்துக்களால் தமிழர்கள் கொதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றனர். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நாளே தமது வாழ்வின் பொன்னாள் என்ற சாரப்பட அவர் கருத்துக் கூறியிருக்கிறார். அதுவும் கோத்தபாயவுக்கு முன்னால் வைத்து அவர் இதைக் கூறியிருக்கிறார். கோத்தபாயவைக் குளிரவைப்பதற்கு முரளிதரன் விரும்பியிருந்தால் வேறு எதையாவது கூறியிருக்கலாம். இறுதிப் போரின் போது ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்ட போது அதை மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு, போர் என்றால் இறப்புக்கள் ஏற்படத்தான் செய்யுமென மிகச் சாதாரணமாகக் கூறியவர்தான் இந்த முரளிதரன். தமிழர்கள் அனுபவித்த வேதனைகளை ஒரு தமிழர் என்ற வகையில் இவர் உணர்ந்து கொள்ளாதது வேதனையளிக்கின்றது.

### கிள்ளுக்கீரைகளான தமிழர்கள்

தமிழர்களைக் கிள்ளுக் கீரையாக மதிக்கின்ற மனோபலம் சிங்களவர்களிடம் மட்டுமல்லாது தமிழர்களிடமும் வளர்ந்து நிற்கின்றமை கவலையளிக்கும் விடயமாகும். தமிழர்கள் மட்டுமாவது இதை அகற்றி விடவேண்டும்.

தமிழர்களுக்குத் தீர்வு கிடைப்பதுதான் முக்கியமே தவிர அலங்கார வார்த்தைகளல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். மிக மோசமாகப்பாதிக்கப்பட்ட அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படுவதே இன்றைய தேவையாகும்.

இதைவிடுத்து ஆசை வார்த்தைகளைக் கூறி அவர்களை ஏமாற்ற முற்படுவதும் அவர்களின் மனம் புண்படும்படியாக நடந்து கொள்வதும் எந்த வகையிலும் ஏற்க முடியாதன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.ராஜ்

# ஒற்றுமை வெறும் கோசமே

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பெரும் எடுப்பில் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. புலம்பெயர் தமிழர்களின் நிதிப் பங்களிப்புடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதனை முன்னெடுத்தது. வாரியிறைக்கப்பட்ட பணத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் தமது வெற்றியை விட கூட்டமைப்பின் தோல்விக்காகப் பாடுபட்டார்கள். அதற்கு விக்னேஸ்வரனும், கூட்டமைப்பில் இருந்து கொண்டே ஊதுகுழலாய் செயற்பட்டார்.

கூட்டமைப்பில் போட்டியிட்டுக் கொண்டே, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினரும் தமது வேட்பாளர்களின் வெற்றியை முன்னிறுத்தி மாத்திரமே பரப்புரைகளை முன்னெடுத்தார்கள். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்களை தோற்கடிக்க பலமுனை முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

தேர்தல் முடிவு, குழிபறிக்க நினைத்தவர்களையும், குழிதோண்டியவர்களையுமே கீழே தள்ளி விட்டது. இந்தத் தேர்தல் முடிவுடன், கூட்டமைப்பு ஏக பலம் மிக்கதாக மாறியது. கூட்டமைப்பின் தலைக்கணம் கூடியதற்கும் அது காரணமாகியது.

மறுபுறம் கூட்டமைப்பின் எழுச்சியால், ஆசனங்களைத் தவறவிட்ட தரப்புக்கள் ஓரணியில் திரள்வதற்கு முயன்றன.

அப்போதைய காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் 'பிராண்ட்' ஆகியிருந்த விக்னேஸ்வரன் தலைமையில் அந்தத் தரப்புக்கள் ஓரணியில் திரண்டன. ஆசன ஆசையே அவர்களின் பிரதானம். மக்கள் இயக்கம் என்ற பெயரில் அவர்கள் திரண்டிருந்தாலும், கூட்டமைப்புக்கு குடைச்சல் கொடுப்பதுதான் அந்த அணியின் நோக்கம். இதை பல தரப்புக்களும் கூறிய போதும், இல்லை மக்கள் இயக்கம். ஒருபோதும் கட்சி அரசியலில் ஈடுபடாது என்று திரும்பத் திரும்பக் கூறினார். பொய்யை திரும்பத் திரும்பச் சொல்வதால் உண்மையாகாது. அதனைக் காலம் உணர்த்தி விட்டது.

கூட்டமைப்புக்கு எதிரான தரப்புக்கள் அனைத்தும் ஓரணியில் திரண்டு 'ஒற்றுமை' கோசத்தை அவர்களும் முன்வைத்தனர். 2016ஆம் ஆண்டு 'எழுக தமிழ்' பேரணியை நடத்தின. அப்போது தமிழ் மக்கள் பேரவையில் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் ஓரணியில் நின்றிருந்தன. காலம் நகரும்போது, பேரவையின் சுயரூபம் வெளியில் தெரிந்தது. சாக்கிலிருந்து பூனை வந்ததைப் போன்று, கட்சி அரசியல்தான் பேரவையின் நோக்கம், குறிக்கோள் என்பது வெள்ளிடைமலையானது.




மாகாணசபையின் ஆட்சிக் காலம் முடிந்ததும், பேரவையினால் கூட்டப்பட்ட கூட்டத்தில் தனது கட்சிக்கான அறிவிப்பை வெளியிட்டார் விக்னேஸ்வரன். இதன் பின்னர், கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலுடன், பேரவைக்குள்ளிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் முரண்பட்டன.

கொஞ்சம் கொஞ்சமாக கதிரைப் போட்டியில் ஒவ்வொரு தரப்பும் முரண்படத் தொடங்கின. கூட்டமைப்பைப் பார்த்து ஒற்றுமைக் குறித்து வகுப்பெடுத்தவர்கள் எல்லாம், பேரவையின் பிச்சல் பிடுங்கலைப் பார்த்து வாய்மூடி ஓடும் நிலைமை ஏற்பட்டது. இந்தப் பிடுங்கல்கள் எல்லாம் உச்சம் பெற்றிருந்த நிலையில்தான், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஓரங்கட்டி, வடக்கில் இரண்டாவது 'எழுக தமிழ்' நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

> எல்லோரது நோக்கமும் அடுத்த முறை 'கதிரை' பிடிப்புத்தான். அதனை ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு விதத்தில் சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

எழுக தமிழுக்கான பரப்புரைகள், 2016ஆம் ஆண்டைப் போன்று பேரவையால் முன்னெடுக்க முடியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இதிலிருந்து முற்றாக ஒதுங்கியதால், ஒதுக்கப்பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. விக்னேஸ்வரன் கட்சி ஒன்றின் இணைத் தலைவராக இருந்து கொண்டு இந்த எழுக தமிழை ஒழுங்கு செய்வதால், அவர் தனது கட்சிக்கான பரப்புரையாகவே இதனை முன்னெடுக்கின்றார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ் சுமத்தியது.

2016ஆம் ஆண்டு எழுக தமிழ் நடத்தப்பட்டபோது, விக்னேஸ்வரன் கட்சி ஒன்றின் சார்பில் முதலமைச்சராக அங்கம் வகித்திருந்தார். அப்போது அவர் இணைத் தலைவராக இருந்தது பிரச்சினையாகத் தெரியவில்லை. இப்போது எந்தவொரு அங்கீகாரமும், மக்கள் பிரதிநிதியும் இல்லாத கட்சியின் ஒன்றின் செயலராக இருந்து கொண்டு, இணைத் தலைவராக இருப்பதுதான் பிரச்சினையாகத் தெரிகின்றதா?

மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் பேரவையிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் ஓரணியில் சந்திப்பதற்கு முயற்சிகள் முன்னெடுத்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிபந்தனைகளை விதித்ததால் அந்தச் சந்திப்பு குழப்பத்தில் முடிந்தது. மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடனான சந்திப்பை முழுமையாக ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்ற முன்னணியின் நிபந்தனைதான் இந்தச் சந்திப்பைக் குழப்பியது.

மக்கள் நலனே நோக்கம், மக்கள் விடுதலையே இலக்கு என்பன பேரவையினரதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரதும் சிந்தனையாக இருந்திருந்தால், இந்தப் பிளவுகள், குழப்பங்கள், ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகள் எதுவுமே நடந்திருக்காது. எல்லோரது நோக்கமும் அடுத்த முறை 'கதிரை' பிடிப்புத்தான். அதனை ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு விதத்தில் சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

தனது இனத்தின் விடுதலையை மூச்சாவரிந்து கொண்டு அதற்காகவே வாழவும், அதற்காக எந்த நிலைக்குச் செல்லவும் இப்போது எந்தவொரு தலைவரும் இல்லை என்பதுதான் வேதனையான உண்மை.

## ஆசிரியருக்கான கடிதம்

# நாய்களால் அவலம்

வீதிகளில் அநாதரவாக அலைந்து திரிகின்ற கட்டாக்காலி நாய்களால் மக்கள் தொல்லைகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நாய்களைப் பிடித்து காப்பகமொன்றில் வைத்துப் பராமரிக்கப் போவதாகத் தகவலும் வெளியாகியிருந்தது. நாய்கள் காப்பகமும் திறக்கப்பட் டது. ஆனால், அதனால் உரிய பலன் கிடைத்துள்ளதா என்பது கேள்வியே?

முன்னார் உள்ளூராட்சி மன்றங்களால் கட்டாக்காலிநாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. ஆனால், மகிந்த ராஜபக்ச இந்த நாய்கள் மீது கருணை கொண்டு அவற்றைப் பிடித்து அழிப்பதைத் தடைசெய்தார். ஆனால் இந்த நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கான வேறு மார்க்கங்களை அவர் தெரிவிக்கவில்லை. அதன் எதிர் விளைவுகளை மக்கள் இன்று அனுபவிக்கின்றனர்.

கட்டாக்காலி நாய்களால் தினமும் பலர் கடிக்கு ஆளாகிச் சிகிச்சை பெறவேண்டியுள்ளது. வீதிகளில் செல்பவர்களை இந்த நாய்கள் துரத்திச் செல்வதையும் காணமுடிகின்றது. ஈருருளி, உந்துருளி ஆகியவற்றில் செல்பவர்கள் கூட இந்த நாய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

வீடுகளில் வளர்க்கப்படுகின்ற நாய்களும் கட்டுப்படுத்துவதற்கு எவருமின்றி வெறித்தனமாகச் செயற்படுவதால் மக்கள் பாதிக்கப்படுவதைக் காணமுடிகின்றது. இதைவிட வீதிகள் மற்றும் ஒழுங்கைகளை இந்த நாய்கள் மோசமான வகையில் அசிங்கப்படுத்துவதால் அவற்றில் நடமாடவே முடியவில்லை. இறுதிப்போரின்போது மனிதர்களுக்குக் காட்டாத கருணையை மகிந்த நாய்களுக்குக் காட்டியதன் விளைவாக மக்கள் அவலங்களை எதிர்கொள்கின்றனர்.

*ந.வாமதேவன்,சுன்னாகம்.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுது[illegible] கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்குமபடி [illegible] கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதையும் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலமர்வு

சாவகச்சேரி,செப்.12
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கான லஞ்ச ஒழிப்பு வேலைத் திட்டம் தொடர்பான செயலமர்வு இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்குமான மக்கள் இயக்க அமைப்பும், லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சரத்துக்களை ஆய்வு செய்யும் ஆணைக்குழுவும் இணைந்து நாடு முழுவதும் நடத்தி வரும் செயலமர்வின் ஒரு அங்கமாக இது இடம்பெறவுள்ளதுஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.12
உரும்பிராய் பரத்தைப்புலம் சிறி கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.
திருவிழா கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (க)

## மாதாந்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.12
உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் மாதாந்த 'முழு நிலா நாள்' கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமைமாலை5மணிக்கு நிலையத்தில் நடைபெறும்.
நிலையத் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் "எதிர்வரும் அரச தலைவர் தேர்தலும், தமிழ் மக்களும்" என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும் என்று நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.(க)

# யாழ்ப்பாணப் பல்கலை முன்பாக சுழற்சிமுறையில் உணவு ஒறுப்பு

*யாழ்ப்பாணம், செப். 12*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களுக்குத் தங்களுடைய பெயர்கள் உள்வாங்கப்படவில்லை என்று தெரிவித்து இளையோர் நேற்றுப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.*




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலில்சுழற்சிமுறையிலானதாகப் போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள கல்வி சாரா ஊழியர்களின் வெவ்வேறு பதவி நிலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு உயர்கல்வி அமைச்சிலிருந்து பெயர் விவரங்கள் அண்மையில் கிடைத்திருந்தன.
அந்தப் பெயர்ப் பட்டியலில் வேலை வாய்ப்புக்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் ஊடாக உயர்கல்வி அமைச்சில் பெயர்களைப் பதிவு செய்தும், தங்களுடைய பெயர்கள் வரவில்லை என்று தெரிவித்து அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தமக்கு நியாயம் கிடைக்கும் வரை தொடர்ச்சியான சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டமாக இது தொடரும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.
பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையிலும் தொண்டராகவும் பணியாற்றியவர்களே போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## கட்டடத் திறப்பு நிகழ்வு

சுன்னாகம்,செப்.12
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், மதிப்புறு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் திட்ட தொழிநுட்ப அலுவலர் பிரதாபன் மற்றும்; வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சுரேஸ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
முதன்மை விருந்தினர் நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்து கட்டடத்தை சம்பிதாயபூர்வமாக திறந்து வைத்தார். கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்தக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. (ஐ)





## மணப்பெண் அலங்கார போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம்,செப்.12
யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட மணப்பெண் அலங்காரப் போட்டியில் கொக்குவிலைச் சேர்ந்த சுலக்சனா பியூட்டி கெயார் உரிமையாளர் சஞ்ஜீவன் சுலக்சனா முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.
யாழ்ப்பாணம் முற்றவெளியில் 'என்ரர் பிரைஸ் சிறிலங்கா' கண்காட்சி கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்றன. இதன்போது பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்ட நிலையில் அதில் ஒன்றான மணப்பெண் அலங்காரப் போட்டியும் நடத்தப்பட்டது. (ஜி)

## இலவச மருத்துவ ஆலோசனை


யாழ்ப்பாணம்,செப்.12
குழந்தைப் பாக்கியம் தொடர்பான இலவச மருத்துவ ஆலோசனை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணிவரை கூழாவடி ஆனைக் கோட்டையில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் நடைபெறும்.
பெண்நோயியல் மற்றும் குழந்தைப் பாக்கியம் சிறப்பு சிகிச்சை மருத்துவ நிபுணர் குருசாமி சுஜாகரன் மருத்துவ ஆலோசனை வழங்கவுள்ளார்.
சிகிச்சை தேவை யுடையோர் அன்றைய தினம் மருத்துவரைச் சந்தித்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சங்காபிசேகமும் மணவாளக் கோலமும்

யாழ்ப்பாணம்,செப்.12
யாழ்ப்பாணம், வண்ணை சாந்தையர்மடம் சிறி கற்பக விநாயகர் ஆலய சங்காபிசேகமும், மணவாளக் கோல உற்சவமும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
காலை 7 மணிக்கு அபிஷேகம், பூசைகள் ஆரம்பமாகி மதியம் அன்னதானம் வழங்கப்படும்.
தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் மணவாளக் கோலராய் பூந்தண்டிகையில் வெளி வீதி வலம் வரும் காட்சி இடம்பெறும் என்று ஆலய தர்மபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# அழகுபடுத்தப்படும் திலீபன் நினைவுத்தூபி

யாழ்ப்பாணம், செப்.12
தியாகதீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள தியாகி நினைவுத் தூபி மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசம் மாநகர சபை உறுப்பினர்களால் சுத்தம் செய்யப்பட்டு அழகுபடுத்தப் பட்டுள்ளது.
தியாகி திலீபனின் நினைவு தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் நிலையில், துப்புரவுப் பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் மேற்கொண்டனர்.
அதேவேளை இந்த வருடத்துக்கான தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் மாநகர சபையால் முன்னெடுக்கப்படவுள்ளன. 12 நாள்களும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.
தியாகி திலீபனின் நினைவு தினம் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்டு, தூபியைச் சீரமைக்க முற்பட்ட வேளையில் பொலிஸார்



தடை விதிக்கக்கோரி நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர். வழக்கில் மாநகர சபையின் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி நிகழ்வை நடத்த அனுமதியை பெற்றுக்கொடுத்திருந்தார். இந்த வருடம் நிகழ்வுக்கு தடைகள் ஏற்படுத்தப்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணக் கைத்தொழில் கண்காட்சி சனியன்று ஆரம்பம்

### உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருள்கள் காட்சிப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், செப். 12


கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யும் வடக்கு மாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் தேசிய அருங்கலைகள் பேரவை, புடைவைக் கைத்தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடத்தும், மாகாணக் கைத்தொழில் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற வுள்ளது.

காலை 9 மணியிலிருந்து இரவு 7 மணிவரை கண்காட்சி இடம்பெறும். முதல் நாள் நிகழ்வுகள் மு.ப 10 மணிக்கு ஆரம்பமாகும்.

பெண்கள் விவகாரம், சமூகசேவை கள், கூட்டுறவு, வர்த்தக, வாணிப, தொழிற்றுறை அமைச்சின் செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக, யாழி லுள்ள துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் எஸ்.பால சந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண தலைமைச் செய லர் அ.பத்திநாதன், யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனோ ல்ட் ஆகியோரும்,

மதிப்புறு விருந்தினர்களாக, யாழ்ப் பாண மாவட்டச் செயலர் நா.வேத



நாயகன், வடக்கு மாகாண பேர வைச் செயலகச் செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், நல்லூர் பிர தேச செயலர் திருமதி எழிழரசி அன் ரன் யோகநாயகம், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சா.சுதர்சன், காரைநகர் பிரதேச செயலர் திருமதி உசா சுப லிங்கம், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலர் கே.சிவகரன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதி பர் கே.எழில்வேந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கைத்தறி நெசவு உற்பத்திகள், களி மண் உற்பத்திகள், தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள், உலோகக் கைப்பணிப் பொருள்கள், ஆபர ணங்கள், சங்கீத உபகரணங்கள், துணிகளினாலான கைப்பணிப் பொருள்கள், பட்டிக், சிரட்டையினா லான கைப்பணிப் பொருள்கள், சிப்பியினாலான கைப்பணிப் பொருள்கள், ரேந்தை, மர உற்பத் திப் பொருள்கள், தோற் பொருள் கள், கல்லாலான ஆக்கங்கள், நானாவித கைப்பணிப் பொருள் கள், நினைவுச் சின்னங்கள் போன் றன கண்காட்சியில் வைக்கப்பட வுள்ளன.

வடக்கு மாகாண உற்பத்தியாளர்க ளின் கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களின் செய்முறை, விற்ப னைக் கூடங்களும் காட்சிப்படுத்தப் படவுள்ளன. (ஓ.5)

## முழுநிலா நாள் கலைவிழா

கொடிகாமம், செப் 12

வடக்கு மாகாணக் கல் வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் ஆவ ணித்திங்கள் முழுநிலா நாள்கலைவிழாநாளை மறுதினம் வெள்ளிக்கி ழமை காலை 9 மணிக் குத் தென்மராட்சி கலா மன்ற கலாசார மண்ட பத்தில் நடைபெறும்.

தென்மராட்சி கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபா கரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாணப் பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசி ரியர் கலாநிதி என்.சண் முகலிங்கன், சிறப்பு விருந்தினராக கோப் பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன்,மதிப் புறு விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள அழகியற் பாட ஆசிரிய வளவா ளர் திருமதி ம.விக்ன ராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (த-159)

## தீவக சாவடியும் அகற்றம்

யாழ்ப்பாணம்,செப் 12

கடந்த ஏப்ரல் குண்டுத் தாக்குதலையடுத்து தீவக நுழைவாயிலில் தற்காலிகமாக அமைக் கப்பட்ட பாதுகாப்புச்சோத னைச் சாவடி அகற்றப் பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டது.

குண்டுத் தாக்குதல்க ளையடுத்து ஏ-9வீதி உட்பட வடக்கின் பல் வேறு பகுதிகளிலும் தற்காலிக சோதனைச் சாவடிகள் அமைக்கப் பட்டு, பாதுகாப்புத் தரப் பினர் சோதனை நடவ டிக்கைகளை முன்னெ டுத்திருந்தனர்.

வாகனங்களில் பய ணிக்கும் பயணிகள் கீழே இறக்கிச் சோத னைக்குட்படுத்தப்பட்டு வந்தனர். இதனால் பயணிகள் கடும் விச னம் தெரிவித்தனர்.

தற்போது நாட்டில் சுமு கமான சூழல் காணப் படுவதால்அநேகமான சோதனை சாவடிகள் படிப்படியாக அகற்றப் பட்டன.

அதன்படி தீவகத்துக்கு நுழையும் பகுதியிலி ருந்த சாவடியும் அகற் றப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன் னர் மீசாலை மற்றும் ஆனையிறவுப் பகுதிக ளில் அமைக்கப்பட்டி ருந்த சாவடிகள் அகற் றப்பட்டிருந்தன. (த-7)

## அலைபேசிகள் நூதனமாகத் திருட்டு பிரபல பாடசாலை மாணவன் கைது

யாழ்ப்பாணம், செப்.12

கந்தர்மடம் - பலாலி வீதி யில் அமைந்துள்ள அலை பேசி விற்பனை நிலையத் துக் குள் புகுந்து சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான அலைபேசிகளைத் திரு டிய குற்றச்சாட்டில், பிரபல பாடசாலை மாணவன் உட்பட இருவர் பொலிஸா ரால் தொழில் நுட்ப உதவி யுடன் கைது செய்யப்பட் டுள்ளனர்.

பலாலி வீதியின் ஆலடிப் பகுதியில் அமைந்துள்ள குறித்த விற்பனை நிலை யத்தில் கடந்த முதலாம் திகதி அதிகாலை 12 மணி யளவில் விலை உயர்ந்த அலைபேசிகள் 18 களவா டப்பட்டிருந்தது. குறித்த விற்பனை நிலையத்தில் மறைகாணி பொருத்தப்பட் டிருந்த நிலையில், முகத் தைத் துணியால் மூடிக் கட்டியவாறு திருட்டில் ஈடு பட்டிருந்தமை பதிவு செய் யப்பட்டுள்ளது. நீண்ட நேரம் தேடுதலில் ஈடுபட்டு பொருள்களை களவாடிய வர், அங்கிருந்து வெளி



யேறும் போது துணியால் தான் கையாண்ட பொருள் கள் மற்றும் இடங்கள் அனைத்தையும் சுத்தம் செய்து கைவிரல் அடையா ளம் கண்டு கொள்ள முடி யாதவாறு அழித்துள்ளார். எனினும் ஓர் இடத்தில் கைவிரல் அடையாளம் அகப்பட்டுள்ளது.

விற்பனை நிலையத்தின் வெப்பத்தைப் போக்கும் வகையில் அமைக்கப்ப டும் சுவரில் உள்ள காற் றாடி இடைவெளிக்கான தடுப்புக்களை உடைத்து, சுமார் 16 முதல் 18 வய தான நபர்கள் உட்புகுந்து திருட்டில் ஈடுபட்டிருந்தமை தெரியவந்தது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தடயவியல் பிரி வினர்கள் விணையில் ஈடு பட்டனர். களவாடப் பட்ட புதிய அலை பேசி ஒன்றை, புதிய சிம் அட்டை பயன்ப டுத்தி ஒருநாள் பாவ னைக்கு உட்படுத் தப்பட்டமையைக் கண்டறிந்தனர்.

தொழில் நுட்ப உதவி யுடன் இருபாலையில் இருந்து தினமும் யாழ். நகருக்குப் பாடசாலைக்கு வருகை தரும் மாணவன் என்பதைக் கண்டறிந்த னர். அவர் விற்பனை நிலையம் வரும் வழியில் மறைகாணி பொருத்திய இடங்களை இனம் கண்டு அவற்றைத் தவிர்த்து அல் லது அந்த இடங்களில் முகத்தை மறைத்துச் செயற்பட்டமை தெரியவந் தது. அவர் கைது செய்ய பட்டார். விசாரணைகளின் அடிப்படையில் மேலும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டு போனதாகக் கரு தப்படும் அலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர். (த-7.10)

## சிறுவர் நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம்,செப்.12

"இயற்கையின் இரகசியங்கள்" எனும் சிறுவர் நாடக ஆற்றுகை இன்று வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பா ணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (க)

## 'எழுக தமிழில்' பங்கேற்க முன்னணி நிபந்தனைகள்

யாழ்ப்பாணம், செப். 12

'எழுக தமிழ்' நிகழ்வில் பங்கேற்பது தொடர் பான பேச்சுக்கு வருவ தற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேர வையினருக்கு நிபந் தனை விதித்து எழுத்தில் கடிதம் அனுப்பியுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது.

தமிழ் மக்கள்பேரவையு டன் நடத்தப்படும் பேச் சுக்கள் தொடர்பில் அதன் பிரதிநிதிகள் திரிபுபடுத்தப்பட்ட தக வல்களை மக்களுக்கு வெளியிடுகின்றனர் என் றும் - திரிவுபடுவ தைத் தடுக்க சந்திப்பு முழுவ தும் ஒளி, ஒலிப் பதிவை மேற்கொள்ளவேண் டும் - என்றும், முன்ன ணி யின் தலை வர் பொ.கஜேந்திர குமார் வெளிநாட்டில் உள்ள தால் ஸ்கைப் மூலம் பேச்சுக்களில் பங்கேற்க அனுமதியளிக்கவேண் டும் என்றும் - நிபந்த னைகளைதமிழ்தேசிய மக்கள் முன்னணி விதித்துள் ளது. முதலா வது எழுக தமிழ் எழுச் சிப்பேரணியில் வீதியில் இறங்கிப் பணியாற்றியி ருந்தனர். எனினும் தமிழ் மக்கள் பேரவை யின் இணைத்தலைவர் களில் ஒருவரான சி.வி. விக்னேஸ்வரன், தனி யாகக் கட்சி ஆரம்பித்த தையடுத்து ஏற்பட்ட முரண்பாடுக ளால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தமுறை நடைபெறும் பேரணிக் கான ஏற்பாடுகளில் பங் கேற்கவில்லை. பேரவை பேச்சுக்கு அழைத்தும் சாத்தியப்படவில்லை. அதில் பங்கேற்பதாக இருந்தால் குறித்த நிபந் தனை களை ஏற்க வேண்டும் என்று முன் னணி கூறுகிறது. எனி னும் நிபந்தனை களை ஏற்பது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை உரிய பதில் வழங்க வில்லை என்றும் தெரிய வருகிறது. (த-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழாவின் தீர்த்தோற்சவம் நேற்றுச் சிறப்புற இடம்பெற்றது. (க)

# வெடுக்குநாறி லிங்கேஸ்வரருக்கு நாளை பொங்கல்

*யாழ்.பல்கலை மாணவர் இணைந்துகொள்வர்*

யாழ்ப்பாணம், செப். 12

**நெ**டுங்கேணி, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வின் இறுதி நாள் நாளை யாகும். அதில் பங்கேற்க யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் செல்லவுள்ளனர். அங்கு செல்வதற்குப் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பொங்கல் விழா கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமானது. பொங்கலின் இறுதி நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

சிங்கள பௌத்த மயமாக்கலின் ஓர் இலக்காக வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமும் அது சூழ்ந்த நிலப்பரப்பும் காணப்படுகிறது.

ஆகவே தொன்மை இருப்பை உறுதி செய்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலை மாணவர் ஒன்றியம் ஆலயப் பொங்கல் திருவிழாவின் 10ஆம் நாள் உபயகாரர்களாக இணைந்துகொள்ளவுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து ஆலயம் செல்ல விரும்புவோர் காலை 6 மணிக்குப் பல்கலை முன்றிலுக்கு வருகை தரவும். பயணத்துக்காகப் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## இரு வீதிகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, நெடுங்குளம் வீதி மற்றும் கேரன்தோட்ட இணைப்பு வீதி ஆகியவற்றின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கேரன் தோட்ட வீதியில் இருந்து நெடுங்குளம் 8ஆம் குறுக்கு வீதியூடாக முதன்மை வீதிக்கு செல்லும் இந்த இணைப்பு வீதி கடந்த பல வருடங்களாகச் சீரமைப்பு இன்றி மண் வீதியாகக் காணப்பட்டது. இந்த வீதி தற்போது 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தார் வீதியாக மாற்றப்பட்டுவருகிறது.

இதேவேளை-கொழும்புத்துறை இரண்டாம் குறுக்கு வீதியும் 13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் சீரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த இரண்டு இணைப்பு வீதியின் சீரமைப்புக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, கிராம ஊரெழுச்சித் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ-17)



## இரு பாடசாலையில் கட்டடங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம்தீவகத்தில் உள்ள இரு பாடசாலைகளின் கட்டடங்கள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இரு கட்டடங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் திறந்து வைத்தார். வேலணை தெற்கு துறையூர் ஐயனார் வித்தியாலய கட்டடம் மற்றும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அதிபர் விடுதிக்கான கட்டடம் ஆகியன இதன்போது திறந்து வைக்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன்,பிரதேசசபை உறுப்பினர்களான அசோக்குமார், பார்த்தீபன், நாவலன் ஆகியோர் கலந்துகொண்டனர். கல்வி அமைச்சின் 'அயல் பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் செயற்றிட்டத்தின் கீழ் இந்தக் கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டன. (ஐ-6)



## அதிபர் விடுதி திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் அதிபர் விடுதி நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டு விடுதிக் கட்டடத்தைதத் திறந்துவைத்தார். (ஐ)

## சுகாதாரத் தொண்டருக்கு 17,18இல் நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், செப்.12

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர் நியமனத்தில் குழறுபடிகள் இடம்பெற்றுள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்து நியமனங்கள் இடைநிறுத்தப்பட்ட நிலையில், அவர்களுக்கு மீளவும் நேர்முகத் தேர்வு எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக எந்தக் கொடுப்பனவுமின்றிப் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்களை நிரந்தர மாக்குவதற்காக 2015 ஆம்ஆண்டு தொடக்கம் பல முயற்சிகள் மேற்கொண்டு, அதன் பிரகாரம் சுகாதார ஊழியர் நியம னத்துக்காக அனுமதி பெறப்பட்டது. கல்வித் தராதரமாக க.பொ. த. சாதாரண தரம் கோரப்பட்ட நிலையில், பின்னர் அதன் கல்வித் தரத்தைக் குறைப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டு நியமனத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன.

454 பேராகக் காணப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள், கூட்டுறவின் ஊடாகப் பணியாற்றியவர்கள், தவறவிடப்பட்டோர்உட்பட952பேரின் பெயர்ப்பட்டியல்காணப்பட்டது. அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு, 454 பேருக்கு நியமனம் வழங்க ஏற்பாடுகள் இடம்பெற்றன.

நேர்முகப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் நடத்தப்பட்டு, நேர்முகப் பரீட்சை இடம்பெற்றவேளையில் தவற விடப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் சிலர் இணைக்கப்படுகின்றனர் என்று கூறப்பட்டபோதும், இறுதியில் 2 ஆயிரத்து 200 பேர் நேர்முகத் தேர்வில் தோற்றினர்.

அண்மையில் க.பொ.த உயர்தரம் வரை பரீட்சை எழுதியவர்கள், இளவயதினர்கூட தொண்டர்களாகப் பணியாற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர்கள் சிலர் காரணம் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

நேர்முத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டவர்களுக்குகடந்த 5ஆம் திகதி நியமனம் வழங்கவிருந்த நிலையில் பாதிக்கப்பட்ட தொண்டர்கள் நடத்திய போராட்டத்தின் காரணமாக நியமனம் வழங்கல் நிறுத்தப்பட்டது. இதன் அடிப்படையிலேயே மீண்டும் நேர் முகத் தேர்வு எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (த-105)

## குளிர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை கிழக்கு சித்தியம்பதியுறை திருவருள் மிகு சிறி அண்ணமார் ஆலய வருடாந்த ஆவணி திருகுளிர்த்தி உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.30 மணிக்கு சிறப்பு அபிசேகம்,பூசை என்பன நடைபெற்று, மதியம் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலயப் பரிபாலனசபையினர்அறிவித்துள்ளனர். (ஐ)

# பலாலிக்கு வருகின்றது இந்திய தொழில்நுட்பக் குழு

யாழ்க்காணம், செப். 12

பலாலி வானூர்தி நிலையத்தின் வசதிகள் தொடர்பான மதிப்பீடுகளைச் செய்வதற்கு, அடுத்த வாரம் இந்தியாவில் இருந்து தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளதாக, கொழும்பிலுள்ள அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'தஹிந்து' நாளிதழ்செய்தி வெளியிட்டுள்ளது.

பலாலியிலிருந்து இந்திய நகரங்களுக்கு வானூர்திச் சேவைகளை ஆரம்பிக்கசிவில்வானூர்திப் போக்குவரத்து அதிகாரசபை மும்முரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஒக்ரோபர் 16ஆம் திகதி வானூர்தி சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பலாலி வானூர்தி நிலையத்தில் இருந்து, கொச்சி, மும்பை, புதுடில்லிக்கான சேவைகள் தொடங்கப்படவுள்ளன.

போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக, சிவில்வானூர்திப் போக்குவரத்து அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பலாலி வானூர்தி நிலையத்தின் வசதிகள் தொடர்பான மதிப்பீடுகளைச் செய்வதற்கு, அடுத்தவாரம் இந்தியாவில் இருந்துதொழில்நுட்பக் குழுவொன்று இலங்கைக்குவரவுள்ளது என்று, கொழும்பிலுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலாலி வானூர்தி நிலையத்தைக் கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவிடம் இருந்து கொடை உதவிகள் கிடைப்பதற்கு சாத்தியங்கள் உள்ள போதிலும், அதுபற்றி கலந்துரையாடப்பட்ட போதிலும், எந்த அதிகார பூர்வ உடன்பாடும் இதுவரை கையெழுத்திடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியைக் கடக்க முற்பட்ட மாணவன் உந்துருளியுடன் மோதி படுகாயம்

வவுனியா, செப்.12

வீதியைக் கடக்க முற்பட்ட மாணவன் உந்துருளியுடன் மோதி படுகாயமடைந்தார்.

இந்த விபத்து வவுனியா, மன்னார் வீதியில் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் நடந்துள்ளது.

வவுனியா, மன்னார் வீதியுடாக ஈருருளியில் பயணித்துக் கொண்டிருந்த மாணவன், பட்டானிச்சூர் பகுதியில் வீதியின் மறுபக்கம் மாற முற்பட்ட வேளை, மன்னார் வீதியுடாக வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த உந்துருளி மோதியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் ஈருருளியில் பயணித்த 16 வயதுடைய மாணவனும், உந்துருளியில் பயணித்த நபரும் படுகாயமடைந்தனர். இருவரும் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க-ரி4)

# குடியிருப்புக்குள் தவறணையை அகற்றுமாறு மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, செப்.12

வவுனியா கந்தன்குளம் கிராமத்தில் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இயங்கி வரும் கள்ளுத் தவறணையை அகற்றக் கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்று மு.ப 10 மணியிலிருந்து 12 மணிவரை கந்தன் குளம் சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



"கந்தன்குள சந்தியை கள்ளுக் கடையாக்காதே..!, பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக கள்ளுக்கடை அமைப்பது முறையானதா?, பாடசாலை போகும் வழியில் கள்ளுக்கடை வேண்டாம்?, கிராமத்தின் நுழைவாயிலில் கள்ளுக்கடை வேண்டாம்?, வேண்டாம் கள்ளுக்கடை வேண்டும் நூலகம்?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் ஏந்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. தொலைபேசியில் உரையாடிய பிரதேச செயலர், குறித்த கள்ளுத் தவறணையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இணக்கம் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர். வவுனியா, பூவரசங்குளம் கிராமர் அலுவலர் பிரிவுக்குட்பட்ட, கந்தன்குளம் சந்தியில் இயங்கி வரும் கள்ளுத் தவறணையால் புலவர்நகர், குருக்கள்ஊர், கந்தங்குளம், பூவரசங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

## வவுனியாவில் நீர் வழங்கல் மட்டுப்படுத்தல்

வவுனியா, செப்.12

வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகளில் இன்று முதல் நீர்வழங்கல் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

அதற்கமைவாக இன்று காலை 5 மணி முதல் 9 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணிவரையும் நீர்வழங்கல் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

தேக்கவத்தை, கற்குழி, வவுனியா நகரம், யாழ் வீதி, குடியிருப்பு, இலுப்பைக்குளம், மூன்றுமுறிப்பு, மதவுவைத்த குளம், சூசைப்பிள்ளையார் குளம், கோவில்குளம், தெற்கிலும்பைக்குளம், தோணிக்கல், வெளிக்குளம், அம்பலாங்கொட, மடுகந்த உள்ளிட்ட பகுதிகளில் நீர் விநியோக மட்டுப்படுத்தப்படும். வறட்சியான காலநிலை காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர் வற்றியுள்ளதால் நீர்விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சிக்கனமாக நீரைப் பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (க-ரி4)

# வெடியில் சிக்கிய யானை கிராமத்துக்குள் தஞ்சம்

### காயங்களுடன் பரிதவிப்பு கண்டுகொள்ளாத திணைக்களம்


முல்லைத்தீவு, செப்.12

முள்ளியவளை, மதவாளசிங்கன் குளப்பகுதியில் வெங்காய வெடியில் சிக்கிய காட்டுயானை ஒன்று கிராமத்துக்குள் தஞ்சமடைந்துள்ளது.

வெங்காய வெடியில் சிக்கிய யானை வாயில் காயமடைந்த நிலையில் அந்தப்பகுதி வயலில் வீழ்ந்து கிடக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதவாளசிங்கன் குள விவசாய கிராமத்துக்குள் புகுந்த காட்டுயானை, விவசாயப் பயிர்களை நாசம்செய்துள்ளதுடன், விவசாயிகளையும் அச்சுறுத்தி வந்தது. நேற்று முன்தினம் பகல் வரை விவசாயக் காணிகளுக்குள் சுற்றித்திரிந்த நிலையில் திடீரென நிலத்தில் வீழ்ந்துள்ளது.

குறித்த யானை பன்றிக்கு வைக்கப்படும் வெங்காய வெடியை உண்டு வாயில் காயமடைந்துள்ளது. உணவு உட்கொள்ள முடியாத யானை நடக்க முடியாத நிலையில் விவசாய நிலத்தில் வீழ்ந்துள்ளது.



இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்தும், அவர்கள் குறித்த யானையை அகற்றவோ அல்லது யானைக்கு மருத்துவம் செய்யவோ முன்வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதவாளசிங்கன் விவசாய கிராமத்துக்கு யானையிலிருந்து பாதுகாப்புப்பெற வேலி அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்த போதும் அதுவும் நடைபெறவில்லை.

இரவில் வெளிச்சம்பாய்ச்சுவதற்காக மின்சார இணைப்பை வழங்க கோரியும் அதுவும் இதுவரை வழங்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான காடுகள் காணப்படுவதால் தெற்கில் இருந்து யானைகள் முல்லைத்தீவு மாவட்டக் காடுகளில் இறக்கிவிடப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை முத்துஐயன்கட்டுக்குளத்திலும், கற்சிலைமடுப் பகுதியிலும் வெங்காய வெடியை உண்ட யானைகள் இவ்வாறு அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதிக்கப்பட்ட காட்டு யானைகளைப் பராமரிக்கவோ மருத்துவ சிகிச்சை கொடுக்கவோ முன்வராத நிலை தொடர்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)



வவுனியா, சாந்தசோலை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 10ஆம் நாளான நேற்றுமுன்தினம் பால்காவடி, செடில் காவடி, பாற் செம்பு, தீச்சட்டி என்பன வீதியூடாக ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டன. (ஐ-ரி1)

# ஆலயங்கள் சமய வழிபாட்டுடன் நிற்காது சமூக சிந்தனையுடன் செயற்படவேண்டும்

### லண்டன் சிறி கனக துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, செப்.12

ஆலயங்கள் சமய வழிபாட்டுடன் மட்டும் நின்றுவிடாது சமூக சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு லண்டன் சிறி கனக துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் எஸ். கருணைலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள கிராமப்புற பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தபின் வவுனியா ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது பதியில் இருக்கும் ஆலயங்கள் சமய வழிபாட்டுடன் நின்று விடாது, சமூகச் சிந்தனையுடன் செயற்பட முன்வரவேண்டும். இதற்கு அனைத்து ஊடகங்களும் துணை புரிய வேண்டும்.

அத்துடன் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவது தொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்." எனத் தெரிவித்தார். (ஐ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாரதியாரின் நினைவு தினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு

வவுனியா,செப்.12
மகாகவிபாரதியாரின் 97 ஆவது நினைவு தினம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் வவுனியா குருமன்காடு பகுதியில் உள்ள அவரது உருவச் சிலை முன்பாக இடம் பெற்றது.
பாரதியாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவரது தமிழ் பற்று மற்றும் சுதந்திர வேட்கை தொடர்பான கருத்துரைகளைதமிழருவிசிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் நிகழ்த்தினர். வவுனியாநகரசபையின் செயலர் இ.தாயாபரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், நகர சபைஉறுப்பினர்களான நா.சேனாதிராசா, க.சந்திரகுலசிங்கம், ரி.கே.ராஜலிங்கம், பா.பிர சன்னா, சமூக சேவை அலுவலர் எஸ்.எஸ்.வாசன், பொது அமைப்பினர், சமூகஆர்வலர்கள், வர்த்தகர்கள்கலந்துகொண்டனர். (க-110,ரி4)

# மதங்கள், இனங்களிடையே சமஉரிமையுடன் அரசமைப்பு

## வேண்டும் என்கிறார் சார்ள்ஸ் எம்.பி.

தலைமன்னார், செப். 12
இனங்கள் தொடர்பில் அரசியல் மாற்றம் ஒன்று கொண்டு வரவேண்டும். சகல மதங்களுக்கும் சகல மொழிகளுக்கும் சம உரிமை கொண்டதாக அரசமைப்புச் சீர்திருத்தம் மேற்கொள்ளும்போதுதான், இலங்கையில் சகல மக்களும் நிம்மதியுடன் வாழலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான பயிற்சி நிலையம் என்பன இணைந்து மதங்களுக்கிடையேநல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்த பல தரப்பு முக்கியஸ்தர்களைச் சந்தித்து வருகின்றனர். இது பற்றி மன்னார் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் கடந்த கருத்தமர்வில் உரையாற்றும்போது சார்ள்ஸ் நிர்மல நாதன் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டமைப்பு மாத்திரமே அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கோரிவருகின்றது. ஒரு சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்புச் சீர் திருத்தம் தேவையில்லையெனக்கூறி வருகின்றனர். ஆகவே நீங்கள் சகல கட்சிகளிடமும் அரசமைப்புச் சீர்திருத்த விடயத்தை வலியுறுத்த வேண்டும்.
இலங்கையில் மக்கள் நிம்மதியின்றி இருக்கக் காரணம், அரசமைப்புச் சீர்திருத்தம் இன்னும் ஏற்படுத்தப்படாதமையே-
இன, மத முரண்பாடுகள் குறைந்துள்ளன என்று நினைக்காதீர்கள்.
என்னைப் பொறுத்தமட்டில் நான் பலருடன் சகஜமாகப் பழகிக் கொண்டிருப்பவன் என்ற அடிப்படையில் கூறுகின்றேன், மத, இனங்களுக்கிடையே முரண்பாடு குறையவில்லை. மாறாக நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் செல்கின்றது.
எனவே, எந்தெந்த இடங்களில் இவ்வாறான பிரச்சினைகளை இனம் காணுகின்றீர்களோ அந்தந்த இடங்களுக்குச் சென்று அந்த நபர்களைத்தான் முதலில் சந்திக்க வேண்டும்.
இங்குள்ள மதக்குருக்கள் மத்தியில் புரிந்துணர்வு இருக்கின்றது. ஆகவே புரிந்துணர்வுப் பிரச்சினைக்குரியவர்களை இனங்கண்டு அவர்கள் மத்தியில் அதை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (த-60)

## வகுப்பறைக் கட்டடங்களை உடன் அமைத்துத் தாருங்கள்

### புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கோரிக்கை

முல்லைத்தீவு, செப். 12
முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பாடசாலை மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடங்கள் முழுமையாக முழுமை செய்யப்படவில்லை என்று பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது.
போரின்பின்னர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முற்றாக அழிவடைந்து, அடிப்படை வசதிகளின்றி 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் கட்டட வசதிகள் பாடசாலைக்குப் போதவில்லை.
தற்காலிக கொட்டகைகளிலும் தகரக்கொட்டகைகளிலும் எட்டு வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பப் பாடங்களுக்குரிய செயற்பாடுகள் ஆலமர நிழலிலும் ஓலைக்கொட்டகைகளிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
இந்தப் பகுதி மாணவர்கள் ஓலைக்கொட்டகைகளிலும் ஆலமர நிழல்களிலும் கல்விகற்று வருகின்றார்கள்.
இவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை இலகுபடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (த-ரி3)

## 'அம்மாச்சி' உணவகம் 15 திகதி வரை பூட்டு

வவுனியா,செப்.12
வவுனியா ஏ-9 வீதியில் புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ளபாரம்பரியஉணவகமான'அம்மாச்சி'உணவகம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.
பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனையால் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வையின் அடிப்படையில் உணவகத்தில் சில சுகாதாரசீர்கேடுகள்அடையாளம் காணப்பட்டுள்ளன.
அதனைநிவர்த்திசெய்யுமாறு அம்மாச்சி உணவக நிர்வாகத்தினருக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அதன் அடிப்படையில் உணவகத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்காகஉணவகம்மூடப்பட்டிருக்கும்என்றுநிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.
இது தொடர்பில் விவசாயத் திணைக்களத்தின் பிரதிமாகாணவிவசாயப் பணிப்பாளர் ஏ. சகிலா பானு தெரிவித்ததாவது:
அம்மாச்சிஉணவகத்தில் மலசலகூடத் திருத்தம் மற்றும் மழை காலங்களில் நீர் தேங்கி நிற்கும் நிலமைகளும்காணப்பட்டமையைக் கருத்தில் கொண்டே திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சீமெந்துவேலைகள் காணப்படுவதால் உணவு வகைகளை சமைக்கவோ, விற்பனை செய்வதோ சிறந்ததல்ல என்ற காரணத்தால் அதனைச்சிலதினங்களுக்கு மூடி திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (க-ரி4,110)



## குப்பைக்கு வைத்த தீயால் பற்றியெரிந்தது தென்னை

வவுனியா,செப்.12
குப்பைக்குத் வைத்த தீயால், அருகிலிருந்த தென்னை மரம் பற்றியெரிந்தது. தீயணைப்புப் படையினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
இந்தச் சம்பவம் வவுனியா, தேக்கவத்தை தொடர் குடியிருப்பில் நேற்று முன்தினம் மாலை நடந்துள்ளது.
குடியிருப்புப்பகுதியில் உள்ள வீட்டுக்கு அருகில் குப்பைகளுக்குத் தீ வைத்துள்ளனர். தீ பற்றி எரிந்து அருகில் இருந்த தென்னை மரத்துக்குப் பரவியது. தென்னை மரம் பற்றி எரிய ஆரம்பித்தது.
அதனை வீட்டுக்காரர் அணைக்க முயற்சித்த போதும் பயனளிக்கவில்லை. உடனடியாக நகரசபை தீயணைப்பு பிரிவினருக்குத் தெரியப்படுத்தினர். அங்கு விரைந்து செயற்பட்ட தீயணைப்பு பிரிவினர் உடனடியாகதீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இதனால் அப்பகுதியில் ஏற்பட இருந்த பெரும் இடர் தவிர்க்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி4)

## முள்ளிப்பள்ளத்தில் இலவச கணினிப் பயிற்சி நிலையம்

வவுனியா,செப்.12
மதவாச்சி, மன்னார் வீதியில் அமைந்துள்ள முள்ளிப்பள்ளத்தில் இலவசக் கணினிப் பயிற்சி நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது.
லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தால் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
நிகழ்வில்நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த பரமச்சாரிய சுவாமிகள், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய நிறுவுநர் எஸ்.ஸ்ரீரங்கன், லண்டன் கனக துர்க்கை ஆலய பரிபாலன சபைத் தலைவர் சொ.கருணைலிங்கம், இந்து மகாசபைத் தலைவர் எஸ்.இராமகிருஷ்ணன், மன்னார் இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் மஹா.தர்மகுமாரக் குருக்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (க)




மன்னார், நானாட்டான் சிறிசெல்வமுத்துமாரியம்மன் ஆலய [illegible] முன்தினம் செவ்வாய்க்கிழமை நானாட்டான் ஆண்டார் செட்டிவெளி [illegible] (ஜ-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## தாக்குதல் நடத்த வந்தோர் சமாதானமானதால் விடுவிப்பு

வவுனியா, செப். 12

வாளுடன் வீடு புகுந்து தாக்குதல் நடத்தினர் என்றுகூறி மூவரைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர். அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு பொதுமக்கள் முன்னிலையில் இருதரப்பும் இணக்கத்துக்கு வந்தனர். அதனையடுத்து மூவரும் வவுனியா மதவுவைத்தகுளம் பகுதியில் நேற்றுக்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டிலுள்ள ஒருவருக்கும் இளைஞர்களுக்குமிடையே தர்க்கம் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் இளைஞர்கள் இருவரும் அந்த இடத்திலிருந்து சென்றிருந்த சிறிது நேரத்தில், முச்சக்கர வண்டியில் வாளுடன் மூவராக வந்தனர். வீட்டிலிருந்தவர்களை வெளியே அழைத்து தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்துள்ளனர். அதன்போதே அயலவர்கள் ஒன்றுகூடி அவர்களை மடக்கிப் பிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

119என்ற இலக்கத்துக்கு அவர்கள் தகவல் வழங்கினர். எனினும் மூன்று மணித்தியாலங்களின் பின்னர் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர். அதன் பின்னர் கிராம பொது அமைப்புக்கள் இரு தரப்பினருடனும் கலந்துரையாடி இணக்கத்துக்கு வந்தனர். இளைஞர்கள் கொண்டு வந்த வாளை பொது அமைப்புக்கள் தம்வசப்படுத்தினர்.

இனி எத்தகைய சட்டவிரோத செயல்களில் ஈடுபடமாட்டோம் என்று கிராம பொது அமைப்புக்கள் மற்றும் அயலவர்கள் முன்னிலையில் குறித்த மூன்று இளைஞர்களும் தெரிவித்தனர். அதன் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (த-ரி4)

# வவு. மருத்துவமனையில் மோப்பநாயுடன் சோதனை

வவுனியா, செப். 12

வவுனியா பொது மருத்துவமனையில் மோப்ப நாயின் உதவியுடன் பொலிஸார் நேற்றுத் தேடுதல் நடத்தினர். அதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

வவுனியாப் பொலிஸாருக்குக்கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய வெடிப்பொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மோப்ப நாயின் உதவியுடன் மருத்துவமனையில் தேடுதல் வேட்டை நடைபெற்றது.

வெளிநோயாளர் பிரிவு, நோயாளர்களின் விடுதிகள், விபத்துப் பிரிவு, மலசலகூடம், உணவகம், அதிகாரிகளின் அறைகள் என்பனவற்றில் சோதனை நடத்தப்பட்டது. மருத்துவமனைக்குச் செல்வோரின் பொதிகளைப் பொலிஸார் மருத்துவமனை நுழைவாயிலில் கடும் சோதனைக்குட்படுத்தினர். எனினும் சந்தேகத்துக்கிடமான பொருள் எதுவும் மீட்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி4)





## பவள விழா

மன்னார், செப். 12

மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் பவள விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் என். முஹம்மட் ஷாபி தலைமையில்நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராகதலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாக நகராத திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம், கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்ற, கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் ரிசாத் பதியுதீன், கல்வி அமைச்சர் அகிலாவிராஜ் காரியவசம், வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன், கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண முதன்மை செயலர் ஏ. பத்திநாதன், எனப் பலர் கலந்து கொள்வர். (ஐ)



# வவுனியா மருத்துவமனை மருத்துவர்கள் போராட்டம்

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து வவுனியா மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்கு - கிழக்கில் மருத்துவர்களின் இடமாற்றத்தில் இவ்வளவு நாளும் இருந்துவந்த முறைமையை மாற்றி, புதிய முறையை உட்புகுத்த முனைகின்றார். அது அவருடைய அரசியல் அனுகூலங்களுக்காகவே. இதன் காரணமாக வடக்கு - கிழக்கில் மருத்துவர் பற்றாக்குறை ஏற்படுவதுடன், கஷ்டப்பட்ட பகுதிகள் வெகுவாகப் பாதிப்பைச் சந்திக்கும்.

எனவே மருத்துவர்களின் இடமாற்ற விடயம் சுயாதீனமாக இடம்பெற வேண்டும் -என்றனர். (த-110)



## பகிரங்க ஏல விற்பனை

முல்லைத்தீவு, செப். 12

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட படகுகள், ஈருருளிகள், வெளியிணைப்பு இயந்திரங்கள், மின்பிறப்பாக்கிகள், சவள்கள், மண்வெட்டிகள் மற்றும் ஏனைய இரும்புப் பொருள்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் ஏல விற்பனை இடம்பெறும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார். (க)

# முல்லையில் தேடப்பட்டவர் கட்டுநாயக்காவில் கைதானார்

முல்லைத்தீவு, செப். 12

முல்லைத்தீவு நீதிமன்று பிடியாணை பிறப்பித்து தேடப்பட்டுவந்த சந்தேகநபர், வெளிநாடு தப்பிச் செல்கையில் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினரால் அவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, முறிப்பு பகுதியில் சட்டவிரோதமாக மரம் வெட்டுவதைத் தடுக்கச் சென்ற வனவளத் திணைக்கள அலுவலர்கள் மீது தாக்குதல் நடத்தியமை, படையினரின் துப்பாக்கியைப் பறித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. முல்லைத்தீவு முறிப்பைச் சேர்ந்த 23 வயதுடையவரே தேடப்பட்டு வந்தார். அவர் கைது செய்யப்பட்டுத் தற்போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவர் முல்லைத்தீவு நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி3)



## பாதுகாப்பற்ற கடவையில் தினமும் பயத்துடன் பயணம்

நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா, செப். 12

வவுனியா, தாண்டிக்குளத்திலுள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியிலிருந்து புதுக்குளம் மற்றும் திருநாவற்குளம் பகுதிகளுக்குச் செல்லும் முச்சந்தியில் தொடருந்துக்கடவை காணப்படுகின்றது.

குறித்த கடவையில் தொடருந்துப் பாதுகாப்பு கேற் பொருத்தப்படவில்லை.

அந்தப் பகுதியில் ஒலி, ஒளிச் சமிக்ஞை பொருத்தப்பட்டுள்ளன எனினும், குறித்த ஒலி, ஒளிச் சமிக்ஞை சீராக இயங்குவதில்லை.

இதனால் அந்த வீதியில் பயணிப்போரும், வாகனங்களும் தொடருந்து வரும் சத்தம் கேட்டே தமது பயணத்தை நிறுத்த வேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது. தற்போது வடக்குக்கான தொடருந்து சேவைகள் அதிகரித்துள்ள நிலையில், பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவை மக்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது. எனவே, இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அந்த வழியாகப் பயணிக்கும் பயணிகள் கோருகின்றனர். இந்தக் கடவையில் கடந்த வருடம் தொடருந்து மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மேலும் தெரிவித்தார். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொனராகலை பிபில பகுதியில் நேற்று முன்தினம் சுமார் அரை மணி நேரம் ஐஸ் மழை பெய்துள்ளது. இது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. (க)

# அரசமைப்பை மீண்டும் மீறினார் மைத்திரி?

கொழும்பு, செப். 12

**ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரும் வகையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட அரசிதழ் அறிவிப்பு, 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மீறுகின்ற செயல் என்று சட்ட நிபுணர்களும், ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.**



அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின்படி, அரச தலைவர், பாதுகாப்பு மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகளையே தன்வசம் வைத்திருக்க முடியும். அதுவும், தற்போதைய அரச தலைவரின் பதவிக்காலம் முடியும் வரையான தற்காலிக ஏற்பாடு தான்.

எனினும், கடந்த திங்கட்கிழமை இரவு வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிப்பின் மூலம் அரச தலைவர் மைத்திரிபால ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

இதுகுறித்து வெரிற்றி ஆய்வு அமைப்பின் தலைவரான, கெஹன் குணதிலக கீச்சகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பாதுகாப்பு, மகாவலி மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை மட்டுமே அரச தலைவரால் கையாள முடியும்.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் 51 ஆவது பிரிவின் படி, எந்தவொரு பழைய விடயத்தையும் அல்லது செயற்பாட்டையும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வர அவருக்கு உரிமை அளிக்கப்படவில்லை, என்று கூறியுள்ளார்.

அதேவேளை. ரூபவாஹினியை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரும் அரசிதழ் அறிவிப்பு, ஜனநாயகத்துக்கும் ஊடக சுதந்திரத்துக்குமான பெரிய அச்சுறுத்தல் என்றும், இது ஒரு மோசமான முன்னுதாரணத்தை அமைத்து, நாட்டில் ஜனநாயக ஆட்சியின் உணர்வைக் குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது என்றும் அரசியல்-ஆய்வாளர் ரசிக ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். (ஒ,5)

## சிறுவர் நாடாளுமன்றம்

“சிறுவர்கள் சமூக ஒருமைப்பாட்டின் முகவர்களாகிறார்கள்’ என்னும் கருப்பொருளில் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் சிறுவர் நாடாளுமன்றம் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நாளை மறுதினம் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் 18 பிராந்திய மன்றங்களையும் சேர்ந்த 150 இற்கு மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் சிறுவர்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட 36 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு, சிறுவர் உரிமைகள், மற்றும் சட்டங்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் சமூக பிரச்சினைகள் என்பவை தொடர்பாகவும் உரையாற்றவுள்ளனர்.

விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர். நா.வேதநாயகன், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனோட், மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் உட்படப்பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள இனிப் புதிய நடைமுறை

கொழும்பு, செப். 12

இலங்கை கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் பொழுது கண்ணை ஸ்கான் அடையாளம் காண்பதற்கான முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு குடி வரவு, குடியகல்வு திணை க்களம் தீர்மா னித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்படும் என்று திணைக்கள கட்டுப்பாட்டாளர் பசான் ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

இதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். உயிரியல் தகவல்களை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான கருவிகள் இறக்குமதி செய்யப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். போலியான தகவல்களை உள்ளடக்கிய கடவுச்சீட்டை கொண்டவர்கள் நாட்டுக்குள் பிரவேசித்தல் மற்றும் நாட்டில் இருந்து வெளியேறுவதை அடையாளம் காண்பதற்கு புதிய நடைமுறை உதவியாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ,5)

# மோடிக்கும் மொட்டுக்கும் முடிச்சு போட்டுப்பார்க்கும் சிங்களவர்கள்

கொழும்பு, செப். 12

பொதுமக்கள் முன்னணியின் மொட்டுச் சின்னத்தை, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் கட்சியின் சின்னமாகவே தென்பகுதியில் தமது ஆதரவாளர்கள் பார்ப்பதால், அந்தச் சின்னத்தை ஏற்க முடியாதிருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஹெற்றிபொலவில் நடந்த கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர, உரையாற்றிய போதே இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கிலுள்ள கட்சி ஆதரவாளர்கள் எம்மிடம் கலந்துரையாடும் போது, மொட்டுச் சின்னத்தை ஒருபோதும் பயன்படுத்த வேண்டாம். அதனைப் பார்க்கும் போது இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் கட்சி தான் நினைவுக்கு வருகிறது.

இந்தியாவில் 14 வீத வாக்குகள் முஸ்லிம் மக்களின் வாக்குகளாகும். எனினும் அதில் ஒருவர் கூட, நரேந்திர மோடிக்கு ஆதரவளிக்கவில்லை.

சாதாரண முஸ்லிம் மக்கள், மொட்டு சின்னத்தை மோடியின் சின்னமாகவும், அவர் இந்துவாதி என்பதாலும் இம் மக்கள் அதனை தவிர்க்கிறார்கள் என்று கூறுகின்றனர்.

அரச தலைவர் தேர்தலில் எமக்கு அனைவரதும் வாக்குகளும் அவசியம். சிங்கள மக்களது வாக்குகளை மாத்திரம் பெற்று தேர்லில் வெற்றி பெற முடியாது.

தமிழ் மக்களானாலும், முஸ்லிம் மக்களானாலும் அனைவரும் ஒரு அரசதலைவருக்கே வாக்களிப்பார்கள். எனவே அவ்வாறான தலைவர் அடிப்படைவாதியாக இல்லாமல் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிக்க வேண்டும். எனவே தான் பொது சின்னத்தை அறிமுகப்படுத்தி தேர்லில் போட்டியிடுவோம் என்பதை வலியுறுத்துகிறோம் - என்றார். (ஒ,5)

## நினைவு நாளும் பேருரையும்

வாழ்வக அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும், நினைவுப் போருரையும் சுன்னாகம் வாழ்வக செல்வா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

வாழ்கத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித கலந்து கொண்டார். மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் உள்ளிட்ட உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன. விருந்தினர்களாக் பரீட்சைத் திணைக்களத்தின் பிரதிப் பரீட்சை ஆணையாளர் செல்வத்துறை பிரணவதாசன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நடராசா [illegible], யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி அதிபர் கமலராணி கிருஸ்ண பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ- ரி1)

## மொழிப் பயிற்றுநர்கள் 1,118 பேருக்கு நியமனம்

கொழும்பு,செப்.12

இரண்டாம் மொழி பயிற்றுநர்கள் ஆயிரத்து 118 பேருக்கு கொழும்பில் வைத்து நேற்று முன்தினம் நியமனம் வழங்கப்பட்டது. அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் அலரி மாளிகையில் வைத்து நியமனம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமைச்சர்கள் வஜிர அபேவர்தன, ரவி கருணாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான திலகராஜ், அரவிந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரண்டாம் மொழிப் பயிற்றுநர்கள் மூன்று மாதப் பயிற்சியின் பின்னர் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோருக்கு இரண்டாம் மொழிக்கல்வியைப் பயிற்றுவிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (க-7)

## நெடுங்கேணி வித்தியில் கட்டடத்துக்கு அடிக்கல்



நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய வகுப்பறைக் கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. பாடசாலையின் அதிபர் செ.பவேந்திரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், வலயக்கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன், கட்டடங்கள் திணைக்களப் பொறியியலாளர் சு.மயூரன் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கருத்திட்டத்தின் கீழ், நெடுங்கேணி மகா வித்தியாலயத்துக்குப் புதிய வகுப்பறை கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிலவரங்கள் தொடர்பில் இணை அனுசரணை நாடுகள் கவலை

கொழும்பு, செப். 12

**ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் இலங்கையின் வேகம் மெதுவாகவே உள்ளது. இதற்கு, அதிகாரத்துவ தடைகள் காரணமாக இருக்கின்றன. இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை கடந்த காலங்களில் முன்வைத்த இணை அனுசரணை நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.**

ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 42 ஆவது கூட்டத்தொடரில், இணை அனுசரணை நாடுகளின் சார்பாக, பிரிட்டன் பிரதிநிதி நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிட்டார்.

கனடா, ஜேர்மனி, வடக்கு மசிடோனியா, மொன்ரெனிக்ரோ மற்றும் பிரிட்டன் சார்பாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான இணை நாடுகள் குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது.

தனது அறிக்கையை புதுப்பித்துக் கொண்டமைக்கு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் ஏற்பட்ட பயங்கரமான உயிர் இழப்புகளுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சபையின் இணைத் தீர்மானம் 30/1 இன் மூலம், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்காக பரந்த சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதான உரிமையை இலங்கை எடுத்துக் கொண்டு நான்கு ஆண்டுகளாகின்றன.

அண்மையில், ஆறு மாதங்களுக்கு முன்னர், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40/1 தீர்மானத்தின் மூலம், இலங்கை இந்த வாக்குறுதிகளை மீள் உறுதி செய்தது.

இலங்கைதனதுமக்களுக்குஅளித்த உறுதிமொழிகள், தேசிய நல்லிணக்கம், உறுதித்தன்மை மற்றும் செழிப்புக்கு இன்றியமையாதது என்று இணை அனுசரணை குழு நம்புகிறது.

தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையின் எதிர்காலத்தை ஆதரிப்பதற்கான அதன் உறுதிப்பாட்டில், இணை அனுசரணை குழு உறுதியுடன் உள்ளது. இந்த நடவடிக்கைகள் வெற்றி பெற அரசு மற்றும் இலங்கை மக்களிடமிருந்து தொடர்ச்சியான ஆதரவு முக்கியமானதாக இருக்கும்.

2015 ஆம் ஆண்டில் இருந்து முக்கியமான முன்னேற்றங்கள் நடந்துள்ளன. அவை இலங்கை அரசின் தரப்பிலுள்ள நல்ல நோக்கங்களை வெளிப்படுத்துகின்றன. மற்றும் பல உறுதியான பணியை பிரதிபலிக்கின்றன.

சில முக்கியமான உள்நாட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும், பல பகுதிகளில் முன்னேற்றத்தின் வேகம் மெதுவாகவே உள்ளது, அதிகாரத்துவக் கட்டுப்பாடுகள் இதற்கு இடையூறாக உள்ளன.

அண்மைய தீர்மானத்தில், இலங்கை தேசியநடைமுறைப்படுத்தல்மூலோபாயத்தின் மூலம், இதற்கான நடவடிக்கைக்கு தெளிவான கால எல்லையுடன் செயற்பட ஐ.நா. மனித உரிமைகள் சபை ஊக்கமளித்தது. இலங்கை இதற்கு முன்னுரிமை அளிக்கும் என்று நம்புகிறோம்.

மனித உரிமைகள் சபையின் ஆணையாளர், ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிப்பது, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டுடன் கடுமையாக சமரசம் செய்கிறது என்றும், நல்லிணக்க முயற்சிகளை குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது என்றும், ஓகஸ்ட் 19 ஆம் திகதி நீங்கள் வெளியிட்ட அறிக்கையில் வெளிப்படுத்திய கவலையை நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம்.

இலங்கை அரசியல் வெளி மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அதன் உறுதிப்பாட்டில், நம்பிக்கையை வளர்ப்பது, அமைதி மற்றும் செழிப்புக்கு இன்றியமையாதது என்று இணை அனுசரணைக் குழு நம்புகிறது.

இந்த சபை பல ஆண்டுகளாக இலங்கை நிலமைகளை கையாளுகிறது. கடந்த காலத்தின் கடுமையான மீறல்களை நிவர்த்தி செய்வதில், அவசியமான பங்களிப்பை வழங்கியுள்ளது. ஆனால் இந்த வேலை முழுமை அடையாமல் உள்ளது. மேலும் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநிறுத்துவதற்கான பாதையில் தொடர்ந்தும், இந்த சபையும் பன்னாட்டுச் சமூகமும் இலங்கைக்குத் தேவையான கவனத்தையும் ஆதரவையும் தொடர்ந்து வழங்குவது மிக முக்கியம் என்று- அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

# கைதிகள் வாரத்தை முன்னிட்டு மைத்திரிக்கு கொடி அணிவிப்பு

கொழும்பு, செப். 12

சிறைக்கைதிகளின் நலன்பேணலை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்படும் கொடி வாரத்தின் முதலாவது கொடி, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றுமுன்தினம் முற்பகல் அரச தலைவர் பணியகத்தில் வைத்து அணிவிக்கப்பட்டது.

இலங்கை சிறைக்கைதிகள் நலன்பேணல் சங்கமும் சிறைச்சாலைகள் திணைக்களமும்இணைந்து இந்த கொடி வாரத்தை ஆண்டுதோறும் ஏற்பாடு செய்து வருவதுடன், இதன்மூலம் கிடைக்கும் நிதியினூடாக சிறைக்கைதிகளுக்கான மருத்துவ முகாம்களை நடத்துதல், மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சிறைக்கைதிகளின் குடும்பத்தினருக்காகப் பல்வேறு நலன்பேணல்நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இலங்கை சிறைக்கைதிகள் நலன்பேணல் சங்கத்தின் உபதலைவர் ஆர். ஏ.டி.சிறிசேன முதலாவது கொடியை அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு அணிவித்தார்.

நீதிஅமைச்சர்தலதாஅத்துகோரல, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பியசிறி விஜயநாத் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (ஓ,5)

# அரச அதிகாரம் கொண்டவர்களே சூழலை மாசடையச் செய்கின்றனர்

## அரச தலைவர் சுட்டிக்காட்டு

இலங்கை உட்பட ஏனைய உலக நாடுகளிலும் அரசியல் அதிகாரம் கொண்டவர்களும், சட்டவிரோத வியாபாரிகளுமே சூழலை மாசடையச் செய்கின்றனர் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அயன மண்டல உயிரியல் மற்றும் பாதுகாப்பு அமைப்பின் ஆசிய பசுபிக் வலய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு துல்ஹிரிய மார்ஸ் எதினா மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக மற்றும் சுற்றாடல் இருப்பை உறுதி செய்வதற்கு மனிதனுக்கும், சுற்றாடலுக்கும் இடையிலான சமநிலையைப் பேண வேண்டியது மிக முக்கியமான தேவைப்பாடாகும். சுற்றாடல் முகாமைத்துவ செயற்பாட்டில் மிக முக்கிய பணி ஆசிய பசுபிக் வலயத்தின் அயன மண்டல நாடுகளில் வசிக்கும் அனைவரிடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் ரீதியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பிரதேசங்களை இனங்கண்டு அவற்றைப் பாதுகாத்து தனித்துவமான அரிய வகை தாவரங்களையும், விலங்குகளையும் பாதுகாத்தல் எதிர்காலத்துக்கான எமது இன்றைய கடமையாகும்.

ஏற்கனவே அயன மண்டல நாடுகளின் உயிர்ப்பல்வகைமை தொடர்பிலான கருத்தாய்வு தற்போது உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வருகிறது. ஆசிய பசுபிக் வலயத்தில் அயன மண்டல உயிர்ப் பல்வகைமையை பாதுகாப்பதற்கான உள்நாட்டு, வெளிநாட்டு விஞ்ஞானிகள் பங்குபற்றும் மாநாடு இலங்கையில் இடம்பெறுவது எமது நாடு பெற்றுக்கொண்ட பெரும் வெற்றியாகும். இலங்கையில் பெருமளவிலான உணவுப் பயிர்கள் வன விலங்குகளால் அழிக்கப்படுகின்றன. அதற்கான நிரந்தரத் தீர்வு தொடர்பில் உலக நாடுகளின் அனைத்து ஆய்வாளர்களும், கல்விமான்களும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகம், சபரகமுவ பல்கலைக்கழகம், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற மாநாட்டில், மாநாட்டின் செயற்பாடுகள் அடங்கிய கைநூல் அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான லசந்த அழகியவன்ன, திலங்க சுமதிபால, மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலர் அநுர திசாநாயக்க, அமைச்சின்செயலர்கள், அரசஅதிகாரிகள்கலந்து கொண்டனர் என்று அரச தலைவரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# ரிஜடியிடம் 11 பேர் ஒப்படைப்பு!

கொழும்பு, செப். 12

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தடை செய்யப்பட்ட இஸ்லாமிய இயக்கங்களில் ஒன்றான ஜமாத்தே மில்லாது இப்ராஹிம் அமைப்பைச் சேர்ந்த 11 பேர் பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். குறித்த 11 பேரும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஒ.5)

# மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கத் தடை!

கொழும்பு, செப். 12

பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகள் தடை செய்யப்படும் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் மனிதர்களாக முன்னேறிச் செல்வது அவசியம். எமது பிள்ளைகள் மிலேச்சத்தனமானவர்களாக வளர்ந்துவிடக் கூடாது.

சட்டக் கல்வியை பாடசாலைக் கல்வியில் உட்படுத்துவது தொடர்பில் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. ஆறாம் மற்றும் ஒன்பதாம் வகுப்புகளில் ஆரம்பித்து கல்விப் பொதுத்தராதர உயர் தரத்தில் இதனை ஒரு பகுதியாக உட்படுத்தவுள்ளோம்.

மக்கள் நாட்டிலுள்ள சட்டங்களை அறியாமல் உள்ளனர். அதனால் தான் தவறிழைக்கின்றனர். சிறைச்சாலைகளை நிரம்புகின்றன. கடந்த காலங்களில் நாட்டில் சட்டத்தை சிதைத்துள்ளனர். சட்டம் அரசியல்வாதிகளின் தேவைக்காகவே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. கல்வியின் பெறுமதியை உணர்ந்ததால்தான் அரசு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் இடமாற்றங்கள்கூட அரசியல் ரீதியாகவே கடந்த காலங்களில் வழங்கப்பட்டுள்ளன. அந்த நிலை இன்று மாற்றப்பட்டுள்ளது. ஒரு போதும் தன்னிச்சையாக இடமாற்றம் இடம்பெறுவதில்லை. தகுதியானவர்களுக்கே அது வழங்கப்படுகிறது-என்றார். (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி உள்ளிட்டவர்களின் கருத்து எங்களைப் பலவீனப்படுத்திவிடும்

## கூறுகிறார் பிரபா கணேசன்

கொழும்பு, செப். 12

நாம் புதிய பாதையை உருவாக்குவதற்காக நேர்மையான முறையிலே பழையவற்றை களைந்து புதிய பாதையில் பயணத்தை ஆரம்பித்துக்கொண்டிருக்கும்பொழுது, முத்தையா முரளிதரன் போன்ற அரசியல் அறிவற்றவர்களின் கருத்துக்கள் எம்மைப் பலவீனப்படுத்தும் என்பதை, இவருடன் பயணிக்கும் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்சவின் வாக்குகளை வீணடிக்கும் விதத்தில் கருத்துக்கள் தெரிவிப்பவர்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த ஐந்து வருடங்களில் இடம்பெற்ற அபிவிருத்திகளையோ அல்லது தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற அரசியல் மாற்றங்களையோ பெற முடியவில்லை.

முரளிதரன் உள்ளிட்டவர்களுக்கு தமிழர்கள் மத்தியில் எவ்வித ஆதரவும் இல்லை. மாறாக தமிழர் என்ற அடையாளத்தைக்கூட இவர் கடந்த காலங்களில் காண்பித்ததும் இல்லை. இவரது வார்த்தைகளை நம்பி அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச களம் இறங்குவாரேயாயின் இது நகைப்புக்கு இடமான விடயமாகும்.

மகிந்த ராஜபக்சவின் வாக்குகளாலேயே நாம் வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை உள்ளது. அவர் தெளிவான முறையில் எமது தமிழ் மக்களுடன் பயணிக்கத் தயாராக உள்ளார். என்பது அவருடனான சந்திப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே நாம் இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம்.

முரளிதரன் உள்ளிட்டவர்களைத் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் ஆதரவை அதிகரிக்க முடியாது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியே தனது சந்தோசமான நாள் என்று அவர் சொல்லியிருப்பாராயின் அது உலகத் தமிழர்களுக்கு விரோதமான சொல். மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியத் தலைவராக கருதப்படும் பிரபாகரனை கொச்சைப்படுத்துபவரை எந்தவொரு தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று அவர் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். (கு)

தேர்தல் தொடர்பில்

# ஐ.தே.கவுடன் பேச்சு நடத்த சு.க. அழைப்பு

## துமிந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாக, கலந்துரையாடல் ஒன்றுக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு, ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத் துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நொச்சியாகமையில் நடைபெற்ற நிகழ் வென்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதற்கு முன்னரும் இது போன்ற கடினமான காலங்களுக்கு முகம் கொடுத்துள்ளது. எமது கட்சி மீண்டும் சக்தி பெறுவது வெகு தூரமில்லை - என்றார்.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரும் பேராசிரியருமான ஜி.எல். பீரிஸ் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# ஞானசாரர் மீதான விசாரணை டிசெ. 5ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, செப். 12

பொதுபல சேன அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தாக்கல் செய்திருந்த மனு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஞானசார தேரருக்கு, எக்னெலிகொட கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தை அவமதித்தமை ஆகியவற்றுக்காக கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சிகள், மதகுருமார்கள், பொதுமக்கள் என்று பலரும் தொடர்ந்து எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.

இந்த நிலையிலேயே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவதற்கு அனுமதி வழங்கினார். அதனைத் தொடர்ந்து அவர், 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த விடயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா, வழக்கு தொடர்ந்தார். இந்தவழக்கின்மனுமீதானவிசாரணையேநேற்றுமுன்தினம் எடுத்துகொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# நியமனம்பெற்ற டிப்ளோமாதாரிகள் 23க்கு முன்னர் கடமையேற்கவும்

## கல்வி அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 12




நியமனம்பெற்ற கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்று கொழும்பு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பாடநெறியை முழுமை செய்த டிப்ளோமாதாரிகள் 4 ஆயிரத்து 286 பேருக்கு ஆசிரியர் நியமனம் கடந்த 8 ஆம் திகதி வழங்கப்பட்டது.

நாடு முழுவதுமுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் 2015/2017 கல்வியாண்டுக்கான போதனா கல்விப் பாடநெறியை முழுமை செய்த டிப்ளோமா தாரிகளுக்கே நியமனம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றிருந்தது.

சிங்கள மொழிமூலமான டிப்ளோமாதாரிகள் 2 ஆயிரத்து 340 பேருக்கும், தமிழ் மொழி மூல டிப்ளோமாதாரிகள் ஆயிரத்து 300 பேருக்கும் ஆங்கில மொழி மூல டிப்ளோமாதாரிகள் 646 பேருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டன.

இவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்தது.

எனினும், நியமனம் பெற்ற சிலர் யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி அமைச்சுக்கு நேற்றுமுன்தினம் சென்று தமக்கு வெளிமாவட்டப் பாடசாலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை மாற்றித் தருமாறு கோரியுள்ளனர்.

எவ்வாறெனினும் இது கொழும்பு கல்வி அமைச்சின் நியமனம் என்பதால் தாம் எதுவும் செய்யமுடியாது என்று அதிகாரிகள் கூறினர். (து-7)

## ஏ.ரி.எம்மில் ரூ.95,000 திருட்டு

# குறுந்தகவல் எச்சரித்ததால் இருவர் கைதாகியுள்ளனர்

பதுளை, செப். 12

ஏ.ரி.எம். அட்டை மூலமாக 95 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞனும் இளம்பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் மகியங்கனை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறும் இளம் பெண்ணைப் பிணையில் விடுவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

மகியங்கனையில் உழவு இயந்திர சாரதியின் ஏ.ரி.எம். அட்டையைத் திருடி 95 ஆயிரம் ரூபா பெற்றுள்ளனர். பணம் பெறப்பட்டதும் அதன் உரிமையாளருக்குக் குறுந்தகவல் சென்றுள்ளது. இதனைக் கண்ட உரிமையாளர் குறிப்பிட்ட வங்கிக்கு சென்று, பணம் எடுக்கப்பட்டமை குறித்து வினவினார். சி.சி.ரி.வி. கமரா ஊடாக பணம் எடுத்தவர்களையும் அடையாளம் கண்டார். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதன்படி இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெகியத்தகண்டிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து)

# ராணுவக் கட்டமைப்பில் தொடரும் மாற்றங்கள்

இராணுவத் தளபதியாக, லெப். ஜெனரல் சவேந்திர சில்வா பொறுப்பேற்றதை அடுத்து, இராணுவக் கட்டமைப்பில் அதிரடியாக பல உள்ளக மாற்றங்களைச் செய்துவருகிறார்.

இதற்கமைய, 53 ஆவது டிவிசனில் இருந்த மேஜர் ஜெனரல் அதுல கொடிப்பிலி, இராணுவத் தலைமையக பொது அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு இராணுவத் தலைமையக தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் துஷன் ராஜகுரு, கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். இராணுவத் தலைமையக பொது அதிகாரியாக இருந்த, மேஜர் ஜெனரல் ஜயந்த செனிவிரத்ன, முல்லைத்தீவு இராணுவத் தலைமையக தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல், பிஜே கமகே 53 ஆவது டிவிசனின் தளபதியாகவும், இராணுவ காலாட்படை பயிற்சி பாடசாலை தளபதியாக பிரிகேடியர் திலக் ஹங்கிலிபொலவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பிரிகேடியர் சூல கொடிதுவக்கு, 53 ஆவது டிவிசனின் பிரதி கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். பிரிகேடியர் நிவுன் ஹெல்ல பணியாளர் பணிப்பாளராகவும், பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர இராணுவத் தலைமை அதிகாரி பணியகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் சூல கொடிதுவக்கு, 53 ஆவது டிவிசனின் இரண்டாவது கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை, அவர் பதவியிறக்க நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை காட்டுவதாக தகவல்கள் கூறுகின்றன. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்தால் நாடு முன்னேறும்

## அமைச்சர் சாகல ரத்னாயக்க கூறுகிறார்

கொழும்பு, செப். 12

வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைக்க வேண்டும். அப்பொழுது தான் எம்முடைய அன்னிய வருமானம் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்று அமைச்சர் சாகலரத்னாயக்க தெரிவித்தார்.

இது பற்றி அவரது ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் அபிவிருத்திக்கு, மக்கள் நன்மையடையும் காரணிகளுக்கு மாத்திரமன்றி பொருளாதார நடவடிக்கைகளின் பொருட்டும் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் அவசியம். அதிவேகப் பாதைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் தென் துறைமுகம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் என்பனவற்றின் மதிப்பு மேலும் அதிகரித்துள்ளது.

இது போன்றே வீதிகள் அபிவிருத்திச் செய்யப்பட்டதன் பின்னர் திருகோணமலை துறைமுகத்தின் மதிப்பும் அதிகரிக்கும். வீதி அபிவிருத்தி மற்றும் துறைமுகங்களிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இந்தத்தொடர்பு காரணமாக நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும். தலைமை அமைச்சர் கூறியதைப் போன்று ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு நவீன நெடுஞ்சாலைகள் அவசியம். நெடுஞ்சாலைகள் தொடர்பில் கதைத்தோமேயானால் அண்மைய காலங்களில் அமைக்கப்பட்ட தெற்கு அதிவேகப் பாதை இதற்குச் சிறந்த உதாரணம்.

நாம் மேற்கொண்ட பணிகள் தொடர்பில் சிறிதளவு கதைத்தமையால் இவை தொடர்பில் மக்கள் அறியாதுள்ளனர். நாம் பெரும் வேலைகளை முன்னெடுத்துள்ளோம்.

நாம் சரியான முடிவுகளை மேற்கொண்டு முன்னேறுவோம் என்னும் நம்பிக்கையை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களிடத்தில் விதைக்கின்றேன். தென் துறைமுகத்தின் மேற்கு முனைய செயற்பாடுகளை விரைவாக ஆரம்



பிக்கவும், வடக்கு முனைய பணிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் - என்றார். (த)

# எந்தவொரு வகையிலும் தீவிரவாதத்தை ஏற்க இயலாது

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

எந்தவொரு வழிமுறைகளிலம் இடம்பெறுகின்ற தீவிரவாத செயற்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அத்துடன் தீவிரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் இலங்கையுடன் இணைந்து செயற்படுவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி படுமோசமான தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று 18 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், இது தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் நேற்று தனது கீச்சகத்தில் சில கருத்துக்களை முன்வைத்தார். அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'எந்தவொரு இடத்திலும், எந்தவொரு வழிமுறைகளிலும் தீவிரவாதம் இடம்பெற முடியாது. அமெரிக்காவில் இடம்பெற்ற 9/11 தாக்குதல்களிலும், இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களிலும் உயிரிழந்தவர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும், இதனால் பாதிக்கப்பட்டவர்களையும் இன்றைய தினத்தில் நினைவு கூருகின்றோம். தீவிரவா தத்தை புறக்கணித்து, சமூக ஒற்றுமைக்கு வரவேற்பளித்து அதனை ஊக்குவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு இலங்கையுடனும், மாலைதீவுடனும் நாங்கள் ஒன்றிணைந்து செயற்படுவோம் என குறிப்பிட்டுள்ளார். (ம)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, செப். 12

நாட்டின் தென் மேற்கு பிரதேச கடற் பகுதியில் நிலவும் முகில் கூட்ட கட்டமைப்பின் காரணமாக ஹிக்கடுவயில் இருந்து காலி ஊடாக மாத்தறை வரையிலான கடற் பிரதேசத்தில் ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பகுதிகளில் கடும் மழை மற்றும் கடும் காற்று வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம)

## யாழ். தொடருந்து நிலையத்தில்

# சுற்றுலாப் பயணிகளுக்கான அறிவுறுத்தல் பலகை திறப்பு

யாழ்ப்பாணம், செப். 12

சுற்றுலாப் பயணிகளுக்கான அறிவுறுத்தல் பலகை யாழ்ப்பாண தொடருந்து நிலையத்தில் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

பிரித்தானிய தூதுவராலயமும் சுற்றுலா துறை பொலிஸாரும் இணைந்து நாடு முழுவதும் சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்கும் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான அறிவுறுத்தல் பெயர்ப் பலகை திறந்து வைக்கப்பட்டது.

குறித்த அறிவுறுத்தல் பலகையில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் ஆபத்துகள் தொடர்பில் உடனடியாக சுற்றுலா பொலிஸாருக்கு அறிவிக்கக் கூடிய தொலைபேசி இலக்கம் குறிக்கப்பட்டுள்ளது.

வடக்கு பகுதிகளில் அண்மைக்காலத்தில் சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து பணப் பொதிகள், அவர்களுடைய ஆவணங்கள் மற்றும் புகைப்பட கருவிகள் களவாடும் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன. இதனைத் தடுத்து சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பை வழங்கும் வகையில் இந்த அறிவுறுத்தல் பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், பிரிட்டன் தூதுவர், ஆலயத்தின் அதிகாரிகள் , சுற்றுலா பொலிஸ்பிரிவு பொறுப்பதிகாரி, யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , யாழ்ப்பாண தொடருந்து நிலைய பொறுப்பதிகாரி எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-7)

### மக்களின் எட்டரை லட்சம் ரூபா மோசடி

# வீடமைப்பு அதிகார சபையின் அலுவலர்கள் மூவர் பணிநீக்கம்

பதுளை, செப். 12

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தில் எட்டரை இலட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் அலுவலக உயர் அதிகாரிகள் மூவர் நேற்றுப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்தில் இந்தப் பண மோசடி இடம்பெற்றிருக்கின்றது.

மொனராகலை மாவட்டத்தில் பலர், வீடமைப்புக்கான கடன் திட்டத்தில் உள்வாங்கப்பட்டனர். அவர்கள் பெற்றிருந்த கடன்களை தேசிய வீடமைப்பு அதிகார சபை மாவட்ட அலுவலகத்தில் செலுத்தி வந்துள்ளது. அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்திலேயே மோசடி இடம்பெற்றிருக்கின்றது.

மாவட்ட அலுவலகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காளர் மேற்கொண்ட பரிசீலனையின்போது, மோசடி இடம்பெற்றிருக்கின்றமை கண்டறியப்பட்டது.

இந்த விடயம் மொனராகலை குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கும் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது. குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் குறித்த மூன்று உயர் அதிகாரிகள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர். இந்த நிலையிலேயே, குறித்த மூன்று உயர் அதிகாரிகளும் கடமை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### மாணவி மீதான துர்நடத்தை

# நிலாவெளி ஆசிரியரின் தண்டனை உறுதியானது

திருகோணமலை, செப். 12

திருகோணமலை, நிலாவெளி தமிழ் வித்தியாலயத்தில் கல்விகற்ற மாணவியொருவர் மீது துர்நடத்தையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஆசிரியருக்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனை மேன்முறையீட்டிலும் உறுதி செய்யப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டு நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் குறித்த ஆசிரியருக்கு 7 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தார். நீதிபதி இளஞ்செழியன் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து குற்றவாளி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவை வினை தாக்கல் செய்திருந்தார்.

தொடர்ந்து மேன்முறையீட்டு மனு விசாரணை நடத்தப்படும் காலத்திலேயே நீதிபதி இளஞ்செழியன், குற்றவாளிக்கு பிணை வழங்கியிருந்தார். மேலும், மேன்முறையீட்டு காலம் முடிவுறுவதற்கு முன்னரே குற்றவாளி உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து குற்றவாளியின் மனைவி குறித்த வழக்கை தொடர்ந்தும் நடத்தி தீர்ப்பை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் தொடர்ந்தும் மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு உட்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், நீதிபதி இளஞ்செழியன் வழங்கிய தீர்ப்பு சரி என உறுதி செய்து தீர்ப்பளித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் பிரதிகளை நேற்றையதினம் திருகோணமலை மேல் நீதி மன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி விடுவிப்புத் தாமதித்தாலும் வீடுகள் முழுமைப்படுத்தப்படும்

## தேசிய வீடமைப்பு அதிகார சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப். 12

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தாமதித்தாலும், அவை முழுமையாகப் பயனாளிகளுக்குக் கிடைக்கும். வீடுகள் முழுமைப்படுத்தப்படும் என்று அதிகார சபையின் யாழ்ப்பாணம் மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.

அதிகார சபையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு தொடக்கம் இந்த ஆண்டு வரை 14 ஆயிரத்து 312 குடும்பங்கள் சபையின் ஊடாகப் பயனடைந்துள்ளனர். வீட்டுத் திட்டம், திருத்த வேலைகளுக்கான கடன்களைப் பெறல், கட்ட வேலைக்கான உள்ளீடுகள் மற்றும் மானியங்களைப் பெறுதல், மாதிரிக் கிராம வீடமைப்புத் திட்டம், இந்திய வீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு உதவித் திட்டங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 710 குடும்பங்களுக்கும், 2016 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 288 குடும்பங்களுக்கும், 2017ஆம் ஆண்டு 646 குடும்பங்களுக்கும், 2018ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 651 குடும்பங்களுக்கும், 2019ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 17 குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

இதன் மூலம் பயனாளிகள் தாம் வாழ்வதற்கான வீட்டைப் பெற்றுக் கொண்டனர். தற்போது இந்த வருடம் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கான நிதி கிடைப்பதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளது. திறை சேரியில் இருந்து நிதி விடுப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் பயனாளிகளுக்கு கட்டுமான வேலைகளுக்கு நிதியை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அடுத்தவரும் மழை காலத்துக்கு இடையில் வீட்டு கூரை வேலையை நிறைவு செய்வதற்கான பணிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவான சாதகமான வேலைகளைச் செய்து தருவதாக அமைச்சர் கூறியுள்ளார். ஆகவே வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான நிதி கால தாமதம் ஏற்பட்டாலும் முழுமையாக அவர்களுக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் மக்களுக்கு இன்னமும் வீடுகள் தேவையாக உள்ளது. சுமார் 29 ஆயிரம் வரையில் வீடுகள் தேவைப்படுகிறது. அதற்கான கோரிக்கைகள் மாவட்டச் செயலகம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளது. அடுத்த வருடமும் சுமார் 50 மாதிரி கிராமங்கள் அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது- என்றார். (க-7)

# அடுத்த வாரம் தொடக்கம் குடிநீர் வழங்கல் வழமைக்கு

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்ப்பாண மாநகர பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கல் அடுத்த வாரம் தொடக்கம் முழுமையாகச் சீரடைந்து விடும் என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் உள்ள நன்னீர் கிணற்றில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதை அடுத்து, மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது கோண்டாவில் நன்னீர் கிணற்றில் இருந்து குடிதண்ணீரை முழுமையாக வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் விநியோகத்துக்கென இரண்டு மோட்டர்கள் மாநகராட்சி மன்றத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மோட்டர்கள் தற்போது கோண்டாவில் நன்னீர் கிணற்றில் பொருத்தப்பட்டு வருகின்றன.

அதன் பணிகள் நிறைவுற்றதும் குடிதண்ணீர் விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்புச் சிரமடைந்தும் விடும்.

அடுத்த வாரத்தில் மக்களுக்கான குடி தண்ணீர் வழங்கல் முழுமையாக இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-17)

# முதியோருக்கான விளையாட்டுக்கள்

வவுனியா,செப்.12

"பன்னாட்டு முதியோர் தினத்தை" முன்னிட்டு முதியோர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றன.

வவுனியா, செட்டிகுள பிரதேச செயலர். க.சிவகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 20 கிராம ஆலுவலர் பிரிவுகளில் இருந்து 200 க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு கொண்டனர்.

கிடுகு பின்னுதல், வேக நடை, சங்கீதக்கதிரை, கூடைக்குள் பந்து போடுதல் போன்ற விளையாட்டுக்கள் ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித்தனியே நடைபெற்றன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள மாகாண முதியோர் தினவிழாவை முன்னிட்டு இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன என்று மாவட்ட சமூக சேவை அலுவலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார். (ஐ-222)

# கண்ணிவெடி அகற்றுநர்களுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,செப்.12

ஹேலோ ட்ரஸ்ற் நிறுவனத்தில் கண்ணிவெடி அகற்றுநர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வெற்றிடத்துக்கு முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர். அத்துடன் பெண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் ஹேலோ ட்ரஸ்ற், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஹேலோ ட்ரஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 23 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றி வருகிறது. (ஐ)

# முத்தரிப்புத்துறை மக்களுக்குரிய தண்ணீர் வழங்கல் சீராக்கப்படும்

## முசலி சபைத் தவிசாளர் தெரிவிக்கிறார்

மன்னார், செப். 12

மன்னாரின் முசலி முத்தரிப்புத்துறை மக்களுக்கு நிரந்தரமாக குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று முசலிப் பிரதேச சபைத் தவிசாளர் சுபிஹான் தெரிவித்துள்ளார்.

கடும் வறட்சி காரணமாக முசலிப் பிரதேச சபைக்கு உட்பட்ட முத்தரிப்புத்துறை மக்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர் கொண்டு வருகிறார்கள். முசலிப் பிரதேச செயலகம் தண்ணீர்த் தாங்கிகளின் மூலமாக தண்ணீர் வழங்கினாலும் அது போதுமானதாக இல்லை. முத்தரிப்புத்துறை மக்கள் தனியார் தண்ணீர் பவுசர்களிடம் பணம் கொடுத்தே தண்ணீர் பெற்றுக் கொள்கின்றனர். கடந்த காலத்தில் மீள் எழுச்சி மூலம் ஆரம்பிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் செயலிழந்துள்ளது. அனைத்து உபகரணங்களும் பழுதடைந்து பெறுமதியான மோட்டர் இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன. இவற்றைச் சீரமைத்துத் தந்தால்தான் முத்தரிப்புத் துறை மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை ஓரளவுக் குத் தீர்த்து வைக்க முடியும் என்று முத்தரிப்புத் துறை மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இது தொடர்பாக முசலிப் பிரதேச சபைத் தவிசாளர் சுபிஹான் தெரிவித்ததாவது:

முத்தரிப்புத்துறை மக்களுக்குக் குடிதண்ணீர்ப் பிரச்சினை உண்டு. அவர்களின் குடிதண்ணீர் தேவையை முழுமை செய்து கொடுக்குமளவுக்கு சபையிடம் வருமானமுமில்லை. அதற்கான வாகன வசதிகளும் இல்லை.

கடும் வறட்சி காரணமாக முசலிப் பிரதேச சபைக்கு உட்பட்ட முத்தரிப்புத்துறை மக்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டு வருகிறார்கள். முசலிப் பிரதேச செயலகம் தண்ணீர்த் தாங்கிகளின் மூலமாக தண்ணீர் வழங்கினாலும் அது போதுமானதாக இல்லை.

முத்தரிப்புத்துறையில் மீள் எழுச்சித் திட்டத்தின் மூலமாகத் தயாரிப்படுத்தப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் பாதியில் செயற்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. அதிலுள்ள உபகரணங்கள் மற்றும் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளன. இதன் பொறுப்பைக் கிராம மட்டத்து அமைப்புகள் ஏற்று அவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும்.

முசலியில் மக்களின் குடிதண்ணீர்த் தேவையை முழுமை செய்ய வேண்டி, சிறப்புத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது பற்றிய ஆவணம், மன்னாருக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வரும் பொழுது கையளிக்கப்படும். இதில் கூடுதல் கவனம் எடுத்து முத்தரிப்புத்துறை மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார். (த-213)

# வடக்கு மாகாண அறநெறி விழா

யாழ்ப்பாணம்,செப்.12

வடக்கு மாகாணத்துக்கான அறநெறி விழா நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் வணக்கத்திற்குரிய சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் யாழ்ப்பாணம், சின்மயா மிஷன் வதிவிட ஆசாரியார் சுவாமி சிதாகாசானந்தா ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, கல்வி அமைச்சின் மேலதிகச் செயலர், கலாகீர்த்தி, உடுவை.எஸ்.தில்லை நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை, சிறிதுர்க்காதேவி ஆலயத் தலைவர், செஞ்சொற் செல்வர், கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்தோனேசியாவில் காட்டுத் தீ!

## அமேசன் போன்று பெருமளவில் பரவியது

ஜகார்த்தா,செப்.12
இந்தோனேசியாவில் மழைக் காடுகள் அமைந்துள்ள சுமத்திரா மற்றும் போர்னியோவில் கடந்த சில நாள்களாகப் பெருமளவில் காட்டுத் தீ பரவி வருகிறது. இதன் காரணமாகக் காடுகள் எரிவதுடன், அந்தப் பகுதிக் காற்றுப் பெருமளவில் மாசடைந்துவருகிறது. விலங்குகள், மனிதர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இந்தக் காட்டுத் தீ காரணமாக அங்கு 400வரையான பாடசாலைகள் மூடப்பட்டன. 10 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் காற்று மாசு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வானூர்திச் சேவைகளும் தடைப்பட்டுள்ளன. காட்டுத் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்தக் காட்டுத் தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து விசாரணை நடந்து வருவதாக இந்தோனேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் உலக நாடுகள் உடனடியாக இறங்க வேண்டும் என்று சூழலியலாளர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.
அண்மையில் எரிந்த அமேசன் காடுகள் உலகின் நுரையீரல் எனக் கருதப்படும் அமேசன் மழைக் காடுகளில் கடந்த மாதம் காட்டுத் தீ ஏற்பட்டு மூன்று வாரங்களுக்கு மேலாக அது தொடர்ந்து எரிந்தது. இதன் சேதம் கடந்த ஆண்டைவிட 87 சதவீதம் அதிகமாகியது.
இந்த நிலையிலேயே இந்தோனேசியாவில் உள்ள மழைக் காடுகளில் தீ ஏற்பட்டுள்ளது. பிரேசிலின் மழைக் காடுகளை அடுத்து இந்தோனேசியாவின் மழைக் காடுகளிலும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.







## வெனிசுலாவில் கொலைப் படை மிச்சல் பச்சலெட் குற்றச்சாட்டு

வோஷிங்டன்,செப்.12
தனது நாட்டில் படுகொலைகளை மேற்கொள்ளத் கொனச் சிறப்புப் பொலிஸ் பிரிவை வெனிசுலா அதிபர் நிக்கொலஸ் மதுரோ அமைத்துள்ளதாகக் குற்றஞ் சாட்டினார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தலைவர் மிச்சல் பச்சலெட்.
'கொலைப் படை' என்று மிச்சல் பச்சலெட் வர்ணிக்கும் இந்தப் பொலிஸ் பிரிவு இந்த வருடம் ஜூலை மாதத்தில் 57 பேரைக் கொன்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.
ஜெனீவாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பன்னாட்டு ஊடகவியலாளர்கள் கூடியிருந்த கூட்டத்திலேயே இது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வெனிசுலாவில், எதுவித விசாரணையும் இன்றிக் கைதுகள், நீதிக்கு புறம்பான கொலைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் பலவந்தமான ஆள்கடத்தல் போன்றவை சர்வ சாதாரணமாக இடம்பெறுகின்றன எனவும் அவர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.
மதுரோவின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் நிலையற்ற தன்மை காரணமாக இதுவரை வெனிசுலாவிலிருந்து 40 இலட்சம் பேர் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஆப்கானிஸ்தானின் காபுல் நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல்

காபுல்,செப்.12
ஆப்கானிஸ்தானின் காபூல் நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே குண்டுத் தாக்குல் நடத்தப்பட்டது. இந்தக் குண்டு வெடிப்பால் ஏற்பட்ட பாதகங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்த உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீது 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அல்கொய்தா அமைப்பு நடத்திய தாக்குதலின் 18வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதே குறித்த தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு யாரும் பொறுப்பேற்கவில்லை. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் திடீரென அமெரிக்கா தலி பான்கள் இடையேயான பேச்சுகளை நிறுத்துவதாக அறிவித்த பின்னர், ஆப்கானிஸ்தானில் நடந்த பெரிய தாக்குதல் இதுவாகும்.

**ஆப்கான் - அமெரிக்கா**

அமெரிக்க வர்த்தக மையம் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்ட 2001ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்கத் தொடங்கின. ஆப்கானில் அமெரிக்கப் படைகளுக்கும் தலிபான் படைகளுக்கும் நேட்டோ படைகளுக்கும் நடுவே சிக்கி நிம்மதியை இழந்து வருகின்றனர் ஆப்கான் மக்கள். ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு அமைதியான தீர்வு காண்பதில் முயற்சிகள் நடந்து வருகின்றன.
ஆப்கனில் 18 ஆண்டுகளாக நடந்து வரும் போரிலிருந்து தன்னை விடுத்துவித்துக் கொள்ள அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்கிறது. இதற்கான பேச்சுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கடந்த வாரம், தலிபான்கள் நடத்திய தாக்குதல்களில் அமெரிக்க [illegible] சிப்பாய்கள் கொல்லப்பட்டதால் பேச்சுகள் முறிவடைந்துள்ளன.

## போர் நிறுத்தத்துக்கு மத்தியில் சிரியாவில் வான்வழித் தாக்குதல்



டமஸ்கஸ், செப்.12
சிரியாவில் 10 நாள்கள் வரையில்போரை நிறுத்தி வைப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கும் நிலையில், ஆயுததாரிகளின் பகுதியில் இராணுவம் வான் வழித் தாக்குதலை நடத்தியது. ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதி வரை போரை நிறுத்தி வைப்பதாக அறிவித்திருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் நடத்தப்பட்ட இந்த வான்வழித் தாக்குதலால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

**பின்னணி**

சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும்,ஐ.எஸ்.ஐ.எஸ்ஆயுததாரிகளுக்கும்இடையே கடந்த ஆறு ஆண்டுகளாகப் போர் நடக்கிறது. அதிபர் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவளிக்கிறது. ஐ.எஸ். ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரச கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டு விட்டன. ஆயுததாரிகளின் பிடியில் உள்ள இறுதிப் பகுதியான இட்லிப் மாகாணத்தில் போர் நடந்து வருகிறது.
இந்த உள்நாட்டுப் போரில் இதுவரை பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் வேறு நாட்டுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

## வடக்கு ஆப்கானில் இராணுவம் தாக்குதல்

காபுல்,செப். 12
ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள தக்கார் மாகாணத்தில் இராணுவம் நடத்திய தாக்குதலில் 30 தலிபான்கள் சாவடைந்தனர். ஆப்கானில், அமெரிக்கா - தலிபான்களிடையேயான பேச்சுகள் நிறுத்தப்பட்டிருக்கின்ற நிலையில், ஆப்கானிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீதும் தலிபான்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.
எதிர்எதிர்த் தரப்புகளின் நிலைகள் மீது அங்கு தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் மனித உரிமை மீறல்; பன்னாட்டு விசாரணை அவசியம்

*ஐ.நாவில் பாகிஸ்தான் கோரிக்கை*



ஜெனிவா,செப்.12

காஷ்மீரில் இந்திய இராணுவம் நிகழ்த்துகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்துப் பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சுவிட்சர்லாந்தின் தலைநகர் ஜெனிவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் பாகிஸ்தான் அமைச்சர் மஹ்முத் குரேஷி தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜம்மு - காஷ்மீருக்கு இந்தியா வழங்கியிருந்த சிறப்புச்சட்டத்தை அது நீக்கியதிலிருந்து அங்கு தொடர்ந்து மனித உரிமை மீறல்கள் நடந்து வருகின்றன. காஷ்மீர் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

காஷ்மீர் மக்களுக்கு எதிராகச் செயற்படும் இந்தியாவுக்கு மனித உரிமைகள் ஆணையகம் கண்டனம் தெரிவிக்க வேண்டும். காஷ்மீரில் நடைபெறும் மனித உரிமை மீறலைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியம். காஷ்மிரில் இந்திய நிகழ்த்தும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்குப் பன்னாட்டு விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் - என்றார்.

**பின்னணி**

இந்தியா - பாகிஸ்தானிடையேயுள்ள ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குத் தான் வழங்கி வந்த சிறப்புரிமை அரசமைப்பை நீக்கியது இந்தியா.

அந்த மாநிலத்தை இரண்டாகப் பிரித்து லடாக் மற்றும் ஜம்மு - காஷ்மீர் என மாற்றியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காஷ்மீர் மக்களை ஒடுக்கும் வகையில், இந்திய இராணுவத்தினர் அங்கு குவிக்கப் பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

அரசியல் கட்சித் தலைவர்கள் வீட்டுச்சிறையில் அடைக்கப்பட்டனர். அந்த மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அங்கு குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத்தினர் மீது காஷ்மீர் மக்கள் கல்லெறி நடத்தினர். காஷ்மீர் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது இந்திய இராணுவம். அங்குள்ள மக்களையும் ஒடுக்கி வருகிறது.



# முகாபேயின் உடல் அவரது கிராமத்தில் அஞ்சலிக்கு வைப்பு

சிம்பாவேயின் முன்னாள் அதிபர் முகாபே இயற்கை எய்தியுள்ள நிலையில் அவரது உடல் சிம்பாவேக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின. சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பயனின்றிக் கடந்த வெள்ளிக்கிழமை அவர் சாவடைந்திருந்தார். சிங்கப்பூரில் இருந்து முகாபேயின் உடல் அவரது சிம்பாவேயிலுள்ள அவர் பிறந்த கிராமமான குட்டாமா வுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அங்குள்ள மைதானம் ஒன்றில் சில நாள்கள் வரை அவரது உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் என்று சிம்பாவே ஊடகங்களில் செய்தி வெளியானது.

**பின்னணி**

தெற்கு ஆப்பிரிக்க நாடான சிம்பாவே 1980ஆம் ஆண்டில் பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெற்றது. 1980ஆம் ஆண்டு முதல் 1987ஆம் ஆண்டு வரையில் ரொபேர்ட் முகாபே (வயது-93) அந்த நாட்டின் தலைமை அமைச்சராகப் பதவி வகித்தார். 1987ஆம் ஆண்டிலிருந்து அந்த நாட்டு அதிபராகப் பதவி வகித்து வந்தார்.

உலகிலேயே மிகவும் வயதான ஆட்சியாளராக அவர் விளங்கினார். இந்த நிலையில் அந்த நாட்டு இராணுவம் 2017 ஆம் ஆண்டு அங்கு ஆட்சியைக் கைப்பற்றிச் சிம்பாவேயைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

இதன் மூலம் முகாபேயின் 37 ஆண்டு கால ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. முகாபே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் நோய்வாய்ப் பட்டார்.



# அமெ. பாதுகாப்பு ஆலோசகரை அதிரடியாக நீக்கினார் ட்ரம்ப்

வோஷிங்டன்,செப்.12

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகச் செயற்பட்டு வந்த ஜோன் போல்டனை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அதிரடியாகப் பணிநீக்கம் செய்தார்.

ஜோன் போல்டனைப் பணிநீக்கம் செய்துவிட்டதாக ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார். உங்கள் சேவை இனி வெள்ளை மாளிகைக்குத் தேவையில்லை.

போல்டனின் ஆலோசனைகள், நிர்வாகத் திறமைகள் பலவற்றை நான் ஏற்கவில்லை. அதனால் அவரைப் பதவி விலகுமாறு கூறினேன். இதையடுத்து அவர் தனது பதவி விலகல் கடிதத்தை வழங்கியுள்ளார்.


இதுவரை போல்டன் செய்த சேவைகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அமெரிக்காவுக்கான புதிய பாதுகாப்பு ஆலோசகரின் பெயர் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று ட்ரம்பின் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் மற்றும் வடகொரியா இடையேயான அமெரிக்காவின் நிலைப்பாடுகள் தொடர்பான விவகாரத்தில் ட்ரம்ப் மீது ஜோன்போல்டன் குற்றஞ் சாட்டிவந்தார். போல்டனின் அயலுறவுக் கொள்கைகள் ட்ரம்புக்குப் பிடிக்கவில்லை. இதனால் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன. இந்த நிலையிலேயே இந்தப் பதவி நீக்கம் நிகழ்ந்துள்ளது.

## போல்டனின் பதவி விலக்கு புதிய பரிமாணத்தை தரும்!

அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் பதவி விலக்கப்பட்டமை வடகொரியா - அமெரிக்கா இடையிலான உறவில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜோன் போல்டனை, போர் வெறி பிடித்தவர் என்றும் - அவர் பதவியில் இருக்கும் வரை சமாதானப் பேச்சுக்களுக்கு இடையூறாகவே இருப்பார் எனவும் - அவரை பதவி விலக்கினால் சமாதானப் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற இடம் வகுக்கும் என்றும் பல மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவிடம் வடகொரியா வேண்டுகோள் விடுத்தமையைச் சுட்டிக்காட்டியே அரசியல் ஆய்வாளர்கள் இவ்வாறு தெரிவிக்கின்றனர்.



# புகுஷிமா அணுமின் நிலைய கதிரியக்க நீர் கடலுக்குள்?

*மீனவர்கள் எதிர்ப்பு*

ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து வெளியாகின்ற அசுத்தக் கதிரியக்க நீரைச் சேகரிக்கின்ற சேமிப்புக் கிடங்கு நிரம்பி வருவதால், அந்த நீர் கடலுக்கு அனுப்பப்படலாம் என்று ஜப்பானின் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பாக இன்னமும் இறுதி [illegible] இந்தக் கதிரியக்க நீர் கடலுக்குள் அனுப்பப்படுவதற்கு ஜப்பான் மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், இது மிகவும் குறைந்த அளவு ஆபத்தைத்தான் விளைவிக்கும் என்று விஞ்ஞானிகள் பலரும் தெரிவித்தனர்.

**பின்னணி**

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமிப் பேரலைகளால் புகுஷிமா அணுமின் நிலையம் சிதைவடைந்தது. கரையோரத்தில் உள்ள புகுஷிமா அணுமின் நிலையத்தின் கதிரியக்கப் பொருள்கள் கடலில் கலப்பதைத் தடுப்பதற்காகக் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உருகிய உலைகளை குளிரச் செய்வதற்காகப் பல மில்லியன் தொன்களில் மிகப்பெரிய தாங்கிகளில் கதிரியக்க நீர் அங்கு சேமித்து வைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுக தமிழ் பேரணியை முன்னிட்டு

# முழு அடைப்புக்கு பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 12

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு -கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகம் தழுவியதாக எழுக தமிழ் பேரணி இடம்பெறவுள்ள நிலையில், இந்தப் பேரணிக்காக முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது தமிழ் மக்கள் பேரவை.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:

எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு அனைவரது பங்கேற்பை உறுதிசெய்யும் வகையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள், சந்தைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள், அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றை மூடியும், போக்குவரத்து சேவைகளை நிறுத்தியும் மீனவர்கள் தமது தொழிலுக்குச் செல்லாதும் ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் மக்கள் பேரவை உரிமையுடன் கேட்டுக்கொள்கிறது என்றுள்ளது. (ம)

## கோத்தபாய...

காந்த தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்றே சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் அரசியல் தலைமையுடைய வேட்பாளரை களமிறக்கத் தவறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்தில் நேற்று ஊடகங்களிடத்தில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்சவை அரசியல் தலைமைத்துவம் கொண்டவராகக் கருதப்பட முடியாது. சஜித் பிரேமதாச இதுவரையில் எந்தவொரு தேசிய செயற்பாடுகளையும் மேற்கொண்டதில்லை. இலங்கை என்பது ஹம்பாந்தோட்டை என அவர் கருதி வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சி பெரிய நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கியுள்ளது - என்றார். (ம)

## பல லட்சம்...

பேருந்து, ஹைஏஸ், முச்சக்கரவண்டி, உந்துருளி என்பனவே அவ்வாறு தீக்கிரையாகின. விபத்து எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில் நேற்று இரவு வரையில் தகவல் வெளிவரவில்லை. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26,105)

## நடப்பு...

ஆண்டுக்குத் தொடர தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத வலி.வடக்கின் 21 கிராம அலுவலர் பிரிவுகளையும் மீளாய்வுக்கு உட்படுத்த அண்மைக்காலமாகப் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அவ்வாறு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டால் 2019ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் 30 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் நீக்கப்படும் அபாயம் இருந்தது. இதனால், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை இரண்டால் குறைவடையும் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்க ளில் மீளாய்வு மேற்கொள்ள வேண்டாம் என்ற கோரிக்கை பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே அடுத்த ஓர் ஆண்டுக்கு அவ்வாறு மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. (ம-105)

## சஜித்தின்...

அலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார் என்று தெரியவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றுமை குறித்து இவர்கள் கலந்துரையாடினார்கள் என்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். சஜித் பிரேமதாச எந்த வகையிலும் கட்சியை விட்டுச் செல்ல மாட்டார் எனவும் அவரைச் சுற்றியிருப்பவர்கள் அதற்காக தூண்டி வருகின்றனர் என்றும் ஹேமா பிரேமதாச, தலைமை அமைச்சர் ரணிலிடம் கூறினார் என்று தெரியவருகிறது. (ம)

## மங்களவுடன்...

இரவு நடைபெற்ற பேச்சின் போது அந்தக் கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார் என அறியமுடிந்தது.

அதைக் கேட்டுச் சிரித்த ரணில், முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்று வாருங்கள். அதன்பின்னர் இது தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழு முடிவு எடுக்கட்டும் என்று கூறினார் எனவும் தெரியவந்தது.

சஜித், தான் அரச தலைவரானால் தலைமை அமைச்சர் பதவி தருவதாக சிலருக்கு அவர் தனிப்பட்ட ரீதியில் உத்தரவாதம் கொடுத்துள்ளார். அவர்களே சஜித்துக்குப் பின்னால் தற்போது நிற்கின்றார்கள்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இரவு ரணிலுடன் சஜித் பேச்சு நடத்துவதற்கு வருவதற்கு முன், சஜித் ஆதரவு தரப்பினர் நிதி அமைச்சில் மங்கள சமரவீரவுடன் சந்திப்பொன்றை நடத்துவதாக ரணிலுக்குத் தகவல் கிடைத்தது. சஜித் வந்தபோது எங்கிருந்து வருகின்றீர்கள் என அவரைப் பார்த்து ரணில் கேட்டபோது அரச தலைவரின் இல்லத்திலிருந்து வருகின்றேன் என்று சொன்னார்.

நேற்றுமுன்தினம் சில திறப்பு விழாக்களுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவோடு சஜித் சென்று வந்திருந்தார். அரச தலைவரின் முழு ஆசீர்வாதத்தோடு நேற்றுமுன்தினம் இரவு மங்களவின் நிதி அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றிருந்தது. அதன் பின்னரே ரணிலைச் சந்திக்க சஜித் வந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு ரணில் - சஜித் இருவருக்கும் இடையில் மட்டுமே சந்திப்பு நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தது. அவர்களது சந்திப்பின்போது மூத்த அரசியல்வாதியான அமைச்சர் ராஜித சேனாரத்ன மட்டும் பார்வையாளராக இருப்பார் என இருவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், சஜித் அலரிமாளிகை வரும்போது மலிக் சமரவிக்கிரம, கபீர் ஹாசீம் மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரும் அவருடன் சேர்ந்தே வந்திருந்தனர். அவர்கள் ஏன் வந்திருக்கின்றார்கள் என சஜித்திடம் ரணில் கேட்டபோது, "எனக்குத் தெரியாது. அவர்கள் தனியாக வந்துள்ளார்கள்" என்று சஜித் பதிலளித்தார். அதன்பின்னர் அவர்கள் பேச்சில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்படவில்லை.

இந்தப் பேச்சில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. பேச்சின் பின்னர் அலரிமாளிகையிலிருந்து சஜித் அங்கிருந்து வெளியேறிச் சென்றபோது, 'சஜித் நல்லவர். ஆனால், சஜித்தை சிலர் அம்பாகப் பாவித்து சுயலாபம் பெற முயல்கின்றார்கள்' என்று அங்கிருந்த தனக்கு நெருக்கமானவர்களிடம் ரணில் தெரிவித்தார் என அறியமுடிந்தது. (ம-22)

## டி.ஏ.ராஜபக்ச...

குற்றம் சுமத்தி, சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் தவறு இருப்பதால், அதனை நிராகரிக்குமாறு கோரி முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுவை 5 பேர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு நேற்றுத் தள்ளுபடி செய்தது.

கோத்தபாயவின் மனுவை உயர்நீதிமன்ற நீதியரசர்களான சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன, பிரசன்ன ஜயவர்தன, விஜித் மலல்கொட, எல்.ரி.பீ.தெஹிதெனிய ஆகியோர் அடங்கிய அமர்வு ஆராய்ந்தது. இதனையடுத்து மனு தொடர்பான உத்தரவை வாசித்த நீதியரசர் சிசிர டி ஆப்ரூ, ஐந்து பேர் அடங்கிய நீதியரசர்கள் அமர்வின் பெரும்பான்மையான நீதியரசர்களின் இணக்கத்துடன் மனுவை விசாரணைக்கு எடுக்காது தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளார். மனுவை விசாரணைக்கு எடுக்க அனுமதிக்கும் அளவுக்கு அதில் நியாயமான சட்ட அடிப்படைகள் இல்லை எனவும் நீதியரசர் தெரிவித்தார். (ம)

## சவேந்திரவின்...

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது அமர்வு ஜெனிவாவில் இடம்பெற்று வருகிறது. இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் நேற்றுமுன்தினம் கூட்டறிக்கையொன்றை விடுத்திருந்தன. அதில், இராணுவத் தளபதியாக சவேந்திரவை நியமித்தமைக்கு மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட கவலையில் பங்கேற்பதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி ஏ.எல்.ஏ.அஸீஸ், சவேந்திர சில்வா விவகாரத்தில் வெளிநாட்டு அபிப்பிராயங்களை நிராகரித்துள்ளார்.

இராணுவத் தளபதியின் நியமனம் அரச தலைவரால் எடுக்கப்பட்ட ஓர் இறையாண்மை மிக்கதான முடிவு என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இலங்கையில் பொதுச்சேவை முன்னேற்றம் மற்றும் உள்நிர்வாகச் செயன்முறைகளைப் பாதிக்கும் வெளிப்புறச் சக்திகள் தேவையற்றவை, ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று அவர் குறிப்பிட்டார். (ம)

## கஞ்சாவை...

2014ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் திகதி இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் படகில் பயணித்த இந்தியர்கள் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 70.1 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது. மீனவர்கள் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் மூவரும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தியர்கள் மூவருக்கும் எதிராக நஞ்சு அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. எதிரிகளுக்கு குற்றப்பத்திரிகை வாசித்துக் காண்பிக்கப்பட்டது. எதிரிகள் மூவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். 'எதிரிகள் தாமாக முன்வந்து குற்றத்தை ஒத்துக்கொண்டதற்கு அமைவாக அவர்களை குற்றவாளிகளாக மன்று அறிவிக்கின்றது. குற்றவாளிகள் மூவருக்கும் 40 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அந்தத் தண்டனை 10 ஆண்டுகளுக்கு (120 மாதங்கள்) ஒத்திவைக்கப்படுகிறது. குற்றவாளிகள் மூவரும் தலா 50 ஆயிரம் ரூபா பணத்தை சாட்சிகள் பாதுகாப்பு நிதியத்துக்கு செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத்தவறின் 2 ஆண்டுகள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த காளி மாரி, நாகப்பட்டினத்தைச் சேர்ந்த நிஜாம் குமரேஸ், இராமநாதபுரத்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் தேசிங்கராஜன் ஆகிய மூவருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது. அவர்களில் காளி மாரி மற்றும் அலெக்சாண்டர் தேசிங்கராஜன் ஆகியோர் சார்பில் சாட்சிகள் பாதுகாப்பு நிதியத்துக்கு பணம் செலுத்த எவரும் இல்லாததால் அவர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தண்டனைக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். (ம-37)

## சொல்ல...

ரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற சந்திப்பு எந்த முடிவும் இல்லாது நிறைவடைந்தது என அறியமுடிந்தது. அதனால் ஐ.தே.கவின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்ற சர்ச்சை முடிவுக்கு வராது நீள்கின்றது. மேற்படி சந்திப்பு குறித்து ரணில் விக்கிரமசிங்கவிடம் பன்னாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் நேற்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயகக் கட்சி. அதற்கென ஒரு யாப்பு இருக்கின்றது. எனவே, அரச தலைவர் வேட்பாளரைத் தனிநபர்களின் விருப்புக்கிணங்கத் தெரிவு செய்ய முடியாது. இது தொடர்பில் ஐ.தே.க. அரசின் பங்காளிக் கட்சிகள் மற்றும் வெளியில் இருந்து ஐ.தே.கவை ஆதரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் பேச்சு நடத்த வேண்டும். அந்தக் கட்சிகளின் விருப்பங்களைக் கேட்க வேண்டும். அதன்பின்னர் ஐ.தே.கவின் மத்திய செயற்குழுவை வேட்பாளரைத் தெரிவுசெய்யும். நானோ அல்லது சஜித் பிரேமதாசவோ அல்லது கரு ஜயசூரியவோ அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என்றால் இது தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுவே இறுதி முடிவெடுக்க வேண்டும். இந்த அனைத்து விடயங்களையும் சஜித்திடம் நேரில் எடுத்துரைத்துவிட்டேன் - என்றார். (ம-22)

## பாலிதவுக்கு...

றத்தின் மூலம் தடையுத்தரவும் பெற்றிருந்தார். அதை மீறி சடலத்தைப் புதைத்த விவகாரத்திலேயே பாலித விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே பாலித விடுவிக்கப்பட வேண்டும் என்று பலரும் அவருக்காக குரல்கொடுக்க ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக தமிழ் இளைஞர்கள் பலரும் தத்தமது சமூக வலைத்தளங்களில் பாலிதவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். (ம)

## சின்னத்தை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சிக்குத் தற்போது கட்சியின் முக்கிய பதவிகளில் உள்ள பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட குழுவினரே பொறுப்புக்கூற வேண்டும். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சுதந்திரக் கட்சி பலமான நிலையில் இருந்தது. ஆனால், நடைமுறையில் அவ்வாறு இல்லை - என்றார். (ம-22)

## கண்ணிவெடி...

பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.12
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்மாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப் பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், செப்.12
மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று வியாழக் கிழமை இரவு 7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், செப்.12
கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கான கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன. இன்று வியாழக் கிழமை பி.ப. 3மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துமகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி மோதவுள்ளது. (23)

### சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்

# ஜெறாட் ஜெறோம் ஜோர்தான் பயணம்



யாழ்ப்பாணம். செப்.12
ஜோர்தான் நாட்டில் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய கால்பந்தாட்ட சம்பியன் தொடரில் பங்கு பற்றவுள்ள இலங்கை 16 வயது தேசிய கால்பந்தாட்ட அணியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெறாட் ஜெறோம் இடம் பிடித்துள்ளார்.
மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை 16 வயது தேசிய கால்பந்தாட்ட அணி இன்று ஜோர்தான் நாட்டுக்கு பயணமாகின்றது. (23)

# கலையரசி அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், செப்.12
மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான கரப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக்கழக அணி 25:13, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

### கோலூன்றிப் பாய்தல் போட்டியில்

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு 2 தங்கம், ஓர் வெண்கலப் பதக்கங்கள்







யாழ்ப்பாணம், செப்.12
இலங்கை பாடசாலைகள் மெய்வன்மை சம்மேளனம் நடத்தும் 89ஆவது ஜோன்ராப்பெற் மெய்வன்மைப்போட்டியில் ஆண்களுக்கான கோலுன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 2 தங்கப்பதக்கங்கள், ஓர் வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றியது.
கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலுன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி சார்பில் பங்குபற்றிய கே.கேதுசன் 3.90 மீற்றர் உயரத்தை பாய்ந்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.
இதேவேளை- 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல்லுன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி சார்பில் பங்குபற்றிய ஜ.டிலக்சன் 3.20 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், எஸ்.தேனுசன் 2.80 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

# தேசிய மட்ட கரம் போட்டியில் வட மாகாண அணிக்கு வெண்கலம்

45ஆவது தேசிய மட்ட விளையாட்டு விழாவின் அங்கமான தேசிய மட்ட கரம் குழு போட்டியில் வடக்கு மாகாண அணி வெண்கலப் பதக்கம் வென்றது.
பதுளை நூலக கோட்போர் கூட்டத்தில் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து ஊவா மாகாண அணி மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டம், ஓர் இரட்டையர் ஆட்டம் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.
இதில் முதாவது ஒற்றையாட்டதில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய கே.கேசாயினி தன்னை எதிர்த்து விளையாடிய ஊவா மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய கவிந்தி டி சில்வாவை 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.
இரண்டாவது ஒற்றையாட்டதில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய டிசாந்தி தன்னை எதிர்த்து விளையாடிய ஊவா மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய பாத்திமாசாரவை 25:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டார்.
தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய கே.கேசாயினி, சதூர்சிகா இணை ஊவா மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தி விளையாடிய திசநாயக்க, கவிந்தி டி சில்வாவை 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர். ஆட்ட முடிவில் வடக்கு மாகாண அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (23)





# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.12
கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கான கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும், ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்றன.
கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று புதன்கிழமை பி.ப. 3மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து இராமநாதன் கல்லூரி அணி மோதியது. இதில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி 57:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 63:47 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். செல்லும் இலங்கை அணி அறிவிப்பு

பாகிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடவுள்ள 15 பேர் அடங்கிய ஒருநாள் இலங்கை அணியையும், 16 பேர் அடங்கிய ரி-20 இலங்கை அணியையும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரிலும் விளையாடவுள்ளது.

இந்த நிலையில், ஒருநாள் போட்டிக்கு இலங்கை அணித் தலைவராக திரிமன்னே நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, ரி-20 போட்டிக்கு அணித் தலைவராக தசுன் சாணக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள் இலங்கை அணி விவரம்;

திரிமன்னே (அணித் தலைவர்), தனுஷ்க குணதிலக, சதீர சமரவிக்கிரம, அவிஸ்க பெர்னாண்டோ, அஞ்சலோ பெரேரா, ஓஷத பெர்னாண்டோ, செஹான் ஜெயசூரிய, தசுன் சாணக்க, மினோட் பாணுக, வனிது ஹசரங்க, லக்ஷான் சந்தகன், நுவான் பிரதீப், இசுறு உதான, கசுன் ராஜித, லகிரு குமார,

ரி-20 இலங்கை அணி விவரம்;

தசுன் சாணக்க (அணித் தலைவர்), தனுஷ்க குணதிலக, சதீர சமரவிக்கிரம, அவிஸ்க பெர்னாண்டோ, ஓஷத பெர்னாண்டோ,செஹான் ஜெயசூரிய,அஞ்சலோ பெரேரா,பாணுக ராஜபக்ஷ, மினோட் பாணுக, லகிரு மதுசங்க, வனிது ஹசரங்க, லக்ஷான் சந்தகன், இசுரு உதான, நுவான் பிரதீப், நுவான், பிரதீப், கசுன் ராஜித, லகிரு குமார.

பாதுகாப்புக் காரணங்களால் இலங்கை அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் பலர் இந்தப் போட்டித் தொடரில் இருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாக். கருத்துக்கு ஹரீன் பதிலடி



இலங்கை அணி வீரர்கள் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள மறுத்துள்ளமைக்கு இந்தியாவின் மிரட்டலே காரணம் என பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர் குற்றஞ் சுமத்தியிருந்தார். இதனை இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

இலங்கை வீரர்களை பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவேண்டாம் என இந்தியா வலியுறுத்தியுள்ளது என வெளியாகியுள்ள தகவல்களில் எந்த உண்மையும் இல்லை.

2009ஆம் ஆண்டு சம்பவத்தின் காரணமாகவே சில வீரர்கள் பாகிஸ்தான் செல்வதில்லை என தீர்மானித்தனர்.

அவர்களின் முடிவுகளை மதித்து நாங்கள் புதிய அணியை தெரிவு செய்துள்ளோம். எங்களிடம் வலுவான அணியுள்ளது. நாங்கள் பாகிஸ்தானை பாகிஸ்தானில் தோற்கடிக்க விரும்புகின்றோம் - என்றார்.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டால் ஐ.பி.எல். போட்டிகளில் இடமளிக்கமாட்டோம் என இந்தியா- இலங்கை வீரர்களை அச்சுறுத்தியது என பாகிஸ்தானின் அமைச்சர் பாவட் சௌத்திரி தெரிவித்துள்ளதை தொடர்ந்தே இலங்கை அமைச்சர் இந்த செய்தியை தனது ருவிற்றரில் பதிவு செய்துள்ளார்.



# ரொனால்டோ புதிய சாதனை

ஐரோப்பிய சம்பியன்ஷிப் தகுதிச் சுற்று பன்னாட்டுப் போட்டிகளில் அதிக கோல்களை அடித்து சாதனையை நிகழ்த்தியுள்ளார் போர்த்துக்கல் அணி வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ.

லிதுவேனியா அணிக்கு எதிரான யூரோ 2020 கால்பந்து தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் 4 கோல்களைஅடித்தகிறிஸ்டியானோ ரொனால்டோ போர்த்துக்கல் அணிக்கு 5:1 என்ற வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

இது வரைக்கும் ராபி கீன் என்ற வீரர் அடித்த 23 கோல்களே சாதனையாக இருந்தது. இதனை ரொனால்டோ முறியடித்தார். இவர் 25 கோல்களை அடித்து இந்தச் சாதனையை முறியடித்தார்.

இது குறித்து ராபி கீன் தெரிவிக்கையில்;

நீங்கள் நிறைய சாதித்து விட்டீர்கள், இந்த சாதனையையாவது எனக்கு விட்டு வைக்கக் கூடாதா? - என்றார்.

லிதுவேனியாவுக்கு எதிரான ஆட்டத்தில் முதல் கோலை பெனால்டி மூலம் அடித்த ரொனால்டோ மேலும் 3 கோல்களை அடித்து தன் மொத்த பன்னாட்டு கோல்களை 93 ஆக அதிகரித்தார்.

# கரீபியன் பிரிமியர் லீக் போட்டியில் பங்கேற்க டிக்வெல, திஸர பெரேராவுக்கு தடை

## இலங்கை கிரிக்கெட் சபை அதிரடி

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான நிரோஷன் டிக்வெல மற்றும் திஸர பெரேரா ஆகியோருக்கு மேற்கிந்தியத்தீவுகளில் இடம்பெறவுள்ள கரீபியன் பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதியை வழங்க இலங்கை கிரிக்கெட் சபை மறுத்துள்ளது.

பாகிஸ்தானுக்கு இந்த மாத இறுதியில் இலங்கை அணி சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் நிரோஷன் டிக்வெல மற்றும் திசர பெரேரா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பாதுகாப்பு காரணங்கள் நிமித்தம் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே கடந்த 4ஆம் திகதி மேற்கிந்தியத்தீவுகளில் ஆரம்பமான கரீபியின் ரி-20 பிரிமியர் லீக் போட்டிகளில் இவர்கள் இருவரும் கலந்து கொள்வதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை முதன்மை நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா தெரிவிக்கையில்;

ஒரு பன்னாட்டு அணி வீரர் தேசிய சுற்றுப் பயணத்தின் போது, அந்த அணிக் குழாமிலிருந்து தாமாக விலகினால், அவர் ஏனைய நாடுகளில் இடம்பெறும் உள்ளூர் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது - என்றார்.







# வோர்னர் நினைத்தால் ஆஷஸ் கிண்ணத்தை கைப்பற்றலாம்

டேவிட் வோர்னரின் ஒரு சிறந்த இன்னிங்ஸ் ஆஷஸ் கிண்ணத்தை வெல்ல உதவியாக இருக்கும் என ஜஸ்டின் லாங்கர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது. இதுவரை நடைபெற்று முடிந்துள்ள நான்கு டெஸ்ட் போட்டிகள் முடிவில் ஆஸ்திரேலியா அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இறுதிப் போட்டியை சமப்படுத்தினாலே தொடரைக் கைப்பற்றி விடலாம். ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர் டேவிட் வோர்னர் 8 இன்னிங்ஸில் ஒரு அரைச் சதம் மட்டுமே அடித்துள்ளார். இறுதி மூன்று இன்னிங்ஸில் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார்.

இறுதிப் போட்டி இன்று லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகின்றது. வோர்னரின் ஒரு சிறந்த இன்னிங்ஸ் ஆஷஸ் தொடரை நாங்கள் கைப்பற்ற உதவியாக இருக்கும் என ஆஸ்திரேலிய அணியின் தலைமை பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;

டேவிட் வோர்னருக்கு இந்தத் தொடர் சிறப்பாக அமையவில்லை. இதைக் கூறுவதில் எந்த ரகசியமும் இல்லை. ஆனால், அவர் சிறந்த உலகத் தரம் வாய்ந்த வீரர். இதை இந்தத் தொடர் முழுவதும் நான் கூறி வருகிறேன். அவர் ஒரு சிறந்த இன்னிங்ஸை ஆடினால், நாங்கள் ஆஷஸ் தொடரை கைப்பற்ற உதவியாக இருக்கும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி தங்கரட்ணம் முருகையா

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கரட்ணம் முருகையா 10.09.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகையாவின் (தெல்லிப்பளை அரசினர் வைத்திய சாலை பிரதம லிகிதர்) மனைவியும், சீனிவாசகம், முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை ( Central Bank), பத்தினி ( Canada) ஆகியோரின் சகோதரியும், கிருஷ்ணவேணி (Quality Checking Post Office-லண்டன்), கிருஷ்ணவதனி (கொழும்பு), இரட்சாபரணன் (Electronic Engineer-லண்டன்), சஞ்சிவ் (இயக்குநர் NALIN IT) ஆகியோரின் தாயாரும், சோகிகரன் (Customs Post Office-லண்டன்), சதானந்தன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி), நளாயினி (லண்டன்), சுபாஜினி (பிரதேச செயலகம் - வேலணை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லக்ஸ்மன் (Head of Science-லண்டன்), அர்ஜின் (Mechanical Engineer), லக்சி (Nursary Teacher+Nursing Babies), நிசாந்தன் (DFCC Bank Officer Incharge), டிலக்சன் (Network engineer-Swisserland), சர்மிலன் (Civil Engineer-கொழும்பு), லக்மியா (லண்டன்), சுபினா (லண்டன்), நளின், ஹறினி, அஸ்வின், Mittaly(Head of Science-லண்டன்), திவானி (University), ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அன்னாரின் வீட்டில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொன்னையா வீதி,**
**பன்னாலை,**
**தெல்லிப்பளை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**மகன் சஞ்ஜிவ் - 0777 917610**
**கிருஷ்ணவதனி - 0777 350602**

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சரஸ்வதி



பிறப்பு 02.03.1934
இறப்பு 09.09.2019

வீரகத்திப்பிள்ளையார் கோயிலடி இமையாணன் மேற்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சரஸ்வதி அவர்கள் கடந்த (09.09.2019) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீபாலச்சந்திரன் (கனடா), ஸ்ரீதரன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாவதி (கனடா), விமலாதேவி (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியும், நிரோசன், கிசோநாத், யனுசாந்தன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அருணகிரி, செல்வநாயகம் மற்றும் த.வள்ளியம்மை (கனடா), மு.வள்ளியம்மை, சுப்பிரமணியம், தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2019) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரகத்திப் பிள்ளையார் கோயிலடி**
**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி**

**தகவல்:குடும்பத்தினர்**
**077 517 1565**

ஆஷஸ் டெஸ்ட் தொடரில்

# ஆடுகளங்கள் ஆஸ்திரேலியாவுக்கு சாதகமாகக் காணப்படுகின்றன

## ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆதங்கம்

ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு சாதகமான ஆடுகளத்தை தயார் செய்து விட்டார்கள் என்று இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் ஆண்டர்சன் தெரிவித்துள்ளார்.
இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. பொதுவாக இங்கிலாந்தில் உள்ள ஆடுகளங்கள் புற்கள் நிறைந்ததாகக் காணப்படும். டியூக்ஸ் பந்து அதிக அளவில் ஸ்விங் ஆகும். இதனால் இங்கிலாந்து செல்லும் அணிகள் மிகப்பெரிய அளவில் திணறும்.
இங்கிலாந்தை சொந்த மண்ணில் வீழ்த்துவது மிகமிகக் கடினம். ஆனால், தற்போது நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரில் ஆடுகளங்கள் ஆஸ்திரேலியாவுக்கு சாதகமான வகையிலேயே காணப்படுகின்றன.
இது குறித்து ஜேம்ஸ் ஆண்டர்சன் தெரிவிக்கையில்;
எங்களை காட்டிலும் ஆஸ்திரேலியாவுக்கு சாதகமான வகையில் ஆடுகளத்தை தயார்செய்து விட்டதாக நான் கருதுகிறேன். நாங்கள் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் போது, அவர்களுக்கு சாதகமான ஆடுகளங்கள் தயாரிக்கப்படுகிறது. அவர்கள் இங்கிலாந்துக்கு வரும்போது, அவர்களுக்கு சாதகமான ஆடுகளம் தயாரிக்கப் பட்டுள்ளது. இது சரியானது என்று என்னால் பார்க்க முடியவில்லை.
எங்களது கிரிக்கெட் சபை போதுமான வகையில் போட்டியை நடத்தும் நாட்டுக்கான வாய்ப்பை எடுத்துக் கொள்ளவில்லை. ஆஸ்திரேலியா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது, அவர்கள் அவர்களுக்குஏற்றபடி ஆடுகளத்தை தயார் செய்கிறார்கள். அதேபோல் எங்களுக்கு சாதகமான வகையில் கொஞ்சம் கூடுதலாக சாதகமான ஆடுகளத்தை தயார்செய்யவேண்டும்- என்றார்.

**SLAS**
**Open/Limited**
**P. உமாசங்கர்**
& வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் - 15
கிரகித்தல் - A.பௌநந்தி
நுண்ணறிவு - S.நவநீதன்
**14.09.2019 சனி**
**9 am- 5.00 pm**
Gk Essay நூல் பெற்றுக்கொள்ளலாம்.
**NEC**
தொடர்பு : 076 166 1986/ 077 741 7143

**13/09, 14/9, 15/9 கருத்தரங்குகள்**
**SLAS**
**Open/Limited**
**P. உமாசங்கர்**
& வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் - 14
விசேட விரிவுரை
**13.09.2019 வெள்ளி**
**9 am - 5.00 pm**
Gk Essay நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிலையம்
தொடர்பு : 076 166 1986/ 077 741 7143

**SLAS**
**Open/Limited**
**P. உமாசங்கர்**
& வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் - 16
பொது அறிவு, இலங்கை, உலக போக்கு - S.அன்ரன் பெரேரா
விடயஆய்வு - V.சிவராசா
**15.09.2019 ஞாயிறு**
**9 am- 5.00 pm**
Gk Essay நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிறுவனம்
தொடர்பு : 076 166 1986/ 077 741 7143

**J.C.B சாரதி தேவை**
**மணித்தியால ஊதியம்**
**500 ரூபாவுக்கு மேல்**
**வழங்கப்படும்.**
**077 722 2715**

**தேவை**
யாழில் இயங்கும் பிரபல உல்லாச விடுதிக்கு
**நிர்வாக உத்தியோகத்தர்,**
**முகாமையாளர் தேவை.**
**077 722 2715**

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
**021 222 8093** 17, Kandy Road, Jaffna

**ஆசிரியைகள் மற்றும் இணைப்பாளர் தேவை**
யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களில் சிறுவர்களுக்கு கற்பிக்க கணினி, அபாக்கஸ் மற்றும் ஆங்கில மொழி முன்பள்ளி ஆசிரியைகள் மற்றும் இணைப்பாளர்கள் தேவை. 3 மாத பயிற்சியின் பின் இணைத்துக்கொள்ளப்படுவீர்கள்.
**076 758 5920**

**உடனடி வேலைவாய்ப்பு**
**முகாமைத்துவ உதவியாளர்**
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
**தகைமைகள்:**
- A/L - வர்த்தகம்
- 25-35 (வயதெல்லை)
- ஆங்கில மொழியில் சாதாரண சித்தி
- கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது
- சம்பளம் தகைமைக்கு ஏற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.

**நேர்முக தேர்வு : 14.09.2019 மு.ப. 9 மணி தொடக்கம்**
தொடர்புகளுக்கு: 076 698 0531
kajan0051@gmail.com
**குடும்ப வைத்திய நிலையம்,**
**125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல.361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org